அமெரிக்க ஜனதிபதி நிக்சன் அவர்கள்

பாப்பரசரைச் சந்திப்பார்

அமெரிக்க ஜனதிபதி நிக்சன் பங்குனி 2-ம்திகதி வத்திக்கானுக்குச்சென்று பரிசுத்த தந்தை 6-வது சின்னப்ப தந்தையைத் தரிசிக்க இருக்கிறார். திரு நிக்சன் ஜனதிபதியானதன்பின் பாப்பரசரைத் தரிசிப்பது இதுவே முதன்முறை. ஆனல், இதற்குமுன் பலமுறைகளும் அவரைத் தரிசித்திருக்கிறார். பாப்பரசரைத் தரிசிக்குமுன் அவர் பரீஸ் நகரம் சென்று அங்கு கடைபெற்றுவரும் வியற்னம் சமாதானப் பேச்சுக் குழுத் தலைவர்களைக்கண்டு உற்சாக மூட்டுவாரென வும் கூறப்படுகிறது. மறு தேச தலைவர்களைச்சந்திக் குமுன் பரிசுத்த தந்தையை ஜனதிபதி சந்திப்பது 6-வது சின்னப்பதந்தையின்மேல் அவர் வைத்திருக்கும் மதிப்பைக் காட்டுகின்றது.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால், அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

காவலன்

தந்தி: "கதலிக் பிறஸ்", யாழ்ப்பாணம். தொலைபேசி: 300:

Registered At The Ceylon G. P. O. As A Newspaper. (தபா. : 1876)

94-ம் புத். | 1969.ம் ஞா பங்குனிமீ 1-ந் உ சனிக்கிழமை—பிரதிசதம் 15 | 8-ம் இல.

செக்கோசிலவாக்கிய மக்களுக்கு
பாப்பரசரின் பாராட்டு

சென்றவருடம் கொமியூனிஸ்த தேச ஆக்கிரமிப்புக் காலத்தில் வெளிநாடுகளில் உல்லாசப் பிரயாணம் செய்துவந்த பல செக்கோசிலாவாக்கிய மக்கள் தமது தேசத்துக்குத் திரும்பிச் செல்லமுடியாதவர்களாகிப் பிறதேசங்களில் சிதித்துவர அத்தேசங்களுக்கு விண்ணப்பித்திருக்கின்றனர். இந்நிலையிலுள்ள ஒரு செக்கோசிலாவாக்கிய கோஷ்டி சென்றவாரம் பரிசுத்த தந்தை 6-வது சின்னப்ப பாப்பரசரைப் பேட்டிகண்டபோது அவர்கூறியதாவது: "உங்கள் தேச மக்கள் படும் உபத்திரவங்களை உலகம் நன்றாய் உணர்ந்திருக்கின்றது. உங்களது தேசமக்களை நாம் விசேஷமுறையில் நேசிக்கின்றோமென்பதையும் உமக்காக அனுதினமும் மன்றாடி வருகிறோமென்பதையும், செக்கோசிலாவாக்கிய மக்கள் என்ன கஷ்டம் அனுபவித்தபோதும் கிறிஸ்துநாதருக்குப் பிரமாணிக்கமான பிள்ளைகள் என்பதை நாம் அறிவோம் என்பதையும் உங்களுக்கு எடுத்துக்கூற விரும்புகிறோம்."

கருதிலுல் மின்சென்ரி

ஹங்கேரி தேச கருதினல் மின்சென்ரி கொமியூனிஸ்த அரசாங்கத்தினல் ஆயுள்காலசிறைத் தண்டனை விதிக்கப்பட்டபோது அவரது காரியதரிசிக் குருவாக இருந்த வணக்கத்துக்குரிய பீல் ஸ்பான்கி அடிகளார் இப்பொழுது இங்கிலாந்தில் ஹங்கேரி தேசத்தவரின் ஆன்மகுருவாகத் தொண்டாற்றுகிறார். கருதினலவர்கள் அமெரிக்க தூதராலயத்தை விட்டுச் செல்லவிரும் பாததன்இரகசியத்தை அவர்சென்றவாரம் யூனிவேர்ஸ்பத்திரிகையில் வெளிப்படுத்தியிருக்கிறார்,பொய்க் குற்றச்சாட்டுகள் செய்து கருதினலவர்களைச் சிறையிலிட்ட அரசாங்கம், அக்குற்றச்சாட்டுகளை வாபஸ் பெறுது இருப்பதே அதற்குக் காரணமாகும். தூதராலயத்திலிருந்து கருதினல் வெளியேறியதும் மீளவும் அக்குற்றச்சாட்டுகள் பொய்யாகச் சுமத்தப்படும் என்று கருதினல் முழுதும் நம்புகிறார்.

ஹங்கேரியின் நிலைமை

கம்யூனிஸ்த ஆட்சியில் இருந்துவரும் ஹங்கேரிய தேச திருச்சபை மேலதிகாரியும், அங்கு எஸ்ரோகோம் நகர் அதிமேற்றிராணியாருமான கருதினல மிண்ட்சென்ரி ஆண்டகையின் நிலைமை இன்னும் முன்போலவே இருந்துவருகிறது. அவர் 1956ம் ஆண்டுமுதல் அங்கு புடாபெஸ்ற் தலைநகரிலுள்ள அமெரிக்க தூதுவராலயத்தில் அடைக்கலம் புகுந்தவண்ணம் இருந்துவருகின்றார்.

கடந்த வருடத்தில் அத்தேசமேற்றிராணிமாரில் அதிகமானோர் ரோமாபுரியைத் தரிசிக்க அனுமதிக்கப்பட்டனர். புதிய கோவில்கள் கட்டப்பட்டன. 118 கோவில்கள் பரக்கப் பழுதுபார்த்துப் புதுப்பிக்கப்பட்டன. கத்தோலிக்க பிரசுரங்கள் 50 சதவீதத்தால் அதிகரித்தன. திவ்விய நன்மை பெறுவார் தொகை 37 சதவிகிதமும் திவ்வியபூசை காண்போர் தொகை 11 சதவிகிதமும் அதிகரித்துள்ளன,

ஆனல், ஞானோபதேசம் படித்தோர் தொகையும், கோவில்களில் ஞானஸ்நானம்பெற்ற குழந்தைகள் தொகையும்,நடைபெற்ற திருமணங்களின் தொகையும் குறைந்துள்ளன.

மெதடிஸ்ற்—
அங்கிலிக்கன் சபைகள்
ஒன்றிக்குமா?

கிறிஸ்தவசபைகளின் ஒற்றுமை இயக்கத்தில் ஆங்கில நாடு ஒரு முக்கியமான கட்டத்தை அடைந்திருக்கிறது. அங்குள்ள இருபெரு சபைகளாகிய அங்கிலிக்கன் சபையும் மெதடிஸ்ற் சபையும் ஒன்றிப்பதா அல்லவா என நிச்சயிப்பதற்காக வருகிற ஆடிமாதம் அவ்விருசபைக்குச் சேர்ந்தவர்களது வாக்கெடுப்பு நடைபெற இருக்கின்றது. காரியங்கள் எவ்வாறுகுமோ என முன்னமே அறிவதற்குச்சிலவாக்கெடுப்புகள் முன்னோடிகளாக நடைபெறுகின்றன. ஒன்றிப்பதற்கு 75 சதவீதம் சாதகமான வாக்குகள்வேண்டும். தற்போதைய நிலைமையில் சற்றுக்குறைவான வாக்குகள் சாதகமாக இருக்கின்றன. ஆனல், சிலமாதங்கள் போகுமுன் 75 சதவீதத்தைக்கூடியவர்கள் சாதகமான வாக்குக் கொடுப்பார்கள் என நம்பப்படுகின்றது.

காலஞ்சென்ற மல்வத்தை மகாதேரோ

தமது 62-ம் பராயத்தில் மாசிமாதம் 4-ம் திகதி காலஞ்சென்ற மல்வத்தை பௌத்தமத பீடாதிபர் அமுனுகம விபாசி தேரோ அவர்கள் பலவகையிலும் சிறப்புவாய்ந்தவர். சமூக ஒற்றுமைக்காகப் பாடுபட்டு உழைத்தவர். இந்நோக்கத்துடன் வடபகுதிக்கு விஜயந்தந்த முதல் மல்வத்தை மடாதிபர் இவரே. சிங்களமக்களது உரிமைகளுக்குப் பங்கம்வராத முறையில் பிறசமூகத்தினரிடம் சமாதான வாழ்வு நடத்தவேண்டுமென்பதே இவரது கொள்கை. பௌத்த குருக்கள் தமது உன்னத பதவிக்கு ஏற்ற முறையில் சீவியத்தை நடத்தத்தக்க பயிற்சி அளிப்பதில் தமது வாழ்நாள்முழுவதும் பாடுபட்டவர். ஒருசிறந்த அறிவாளி. இவரது இளம் பராயத்தில் சில வருடகாலம் முறுத்தலாவல என்னும் இடத்திலிருந்த கிறிஸ்தவபாடசாலையில் கல்வி கற்றவர்.

இந்நாட்களில் வசிப்பவர் பாக்கியசாலிகளே

—6-வதுசின்னப்பர்

"இக்காலத்தைப்பற்றிப் பலரும் பலவாறு சொல்லிக்கொள்கின்றனர். தேவனதுதிருச்சபைக்கு உள்ளும் புறமும் பலவகையான சோதனைகள் ஏற்பட்டிருக்கும்காலம் என்பது உண்மையாயினும் அச்சோதனைகளை எதிர்த்துப் போராடத் தேவன் போதியளவு விசுவாசத்தைத் தம் மக்களுக்குக் கொடுத்திருப்பதைக் காண்பது பெரும் ஆறுதலை அளிக்கின்றது. இவ்வகையான ஆறுதலைத் தரும்காலங்கள் இக்காலத்தைப்போல் பிறதில்லை' என்று 6-வது சின்னப்பதந்தை சென்றவாரம் வத்திக்கானில் அளித்த பேட்டியொன்றில் கூறியுள்ளார்.

புதிய தலைவர்

இலங்கையில் கல்வித்தொண்டு பலகல்லூரிகளில் ஆற்றிவரும் கிறிஸ்தவ சந்நியாச சபைகளுள் "மாறிஸ்ற் சகோதரர்" சபையும் ஒன்று. இச்சபைக்கு இலங்கையில் ஒருபுதிய தலைவர் நியமிக்கப் பட்டிருக்கின்றார். அவர், அதிசங்கைக்குரிய பேர்க்மன்ஸ் சகோதரரே. இவருக்குமுன் பலவருடகாலமாக அதிசங்கைக்குரிய நிசியேர் சகோதரர் இக்கடமையை ஆற்றிவந்தார். சகோதரர் பேர்க்மன்ஸ் அவர்கள் சந்நியாசியாக இலங்கையில் பல இடங்களிலும் சேவைபுரிந்திருக்கின்றார். லண்டன் சர்வகலாசாலைப் பட்டதாரி. ஐரோப்பாவிலுள்ள தமது சபை ஸ்தாபனங்களிலும் உயர் அதிகாரங்களுக்குப் பயிற்றப்பட்டிருக்கிறார்.

அகில உலக மேற்றிராணிமார் சினொட்

அடுத்த வருடத்தில் நடக்க இருக்கும் அகில உலக மேற்றிராணிமார் சினொட்சபையின் நிகழ்ச்சி நிரலை இப்பொழுதே வெளிப்படுத்துவது நல்லதென ஆங்கில நாட்டுக் கருதினல் ஹீனன் அடிகளார் கூறியிருக்கின்றார். அப்படி வெளிப்படுத்தப்படுமாயின் மகாநாடுகூடு முன்பாகவே உலகின் பல பாகங்களிலுமுள்ள கத்தோலிக்கரின் அபிப்பிராயங்களை அச்சபையில் ஆலோசிக்க முடியுமென அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

தவம்பற்றி தத்துவ ஞானிகள்

தவம் செய்யுங்கள் என்றகுரல் வளந்தரத்தில் ஒலிக்கிறது. இது தவத்தின் காலம். தவம் நம்மில் பலருக்கும் தயக்கம்; கானகம் செல்ல வேண்டும்—காவியுடுக்க வேண்டும் அதுதான் தவமா? இல்லை. தத்துவ ஞானிகள் சிலர் தவம் பற்றித்தந்த கருத்துக்களை ஆராய்வோம்.

தவம் சாதனை இவற்றின் வலிமையைக் கொண்டுதான் மனிதன் உயர் நிலையடைய முடியும்.

—தாகூர்.

தவம் என்பது தன் ஆசையைக் கெடுத்தலேயாகும்.

—ஓர் அறிஞர்.

தவம் செய்வார் தம் கருமம் செய்வார் மற்றல்லார்; அவஞ் செய்வார் ஆசையுட்பட்டு.

—வள்ளுவர்.

உடன் பற்றொழிய ஒருபற்று மில்லை உடையவனே

—பட்டினத்தார்.

உன் உள்ளத்தைப் பண்படுத்து; அதற்காகக் கானகம் செல்ல வேண்டியதில்லை. உள்ளமாகிய விடுதியில் அந்த அமைதிக் குடிசையில் அமர்ந்து சிற்றின்பங்களுக்கு இடமளியாது உயர்ந்த சிந்தனைசெய்.

—மார்க் அரேலியர்.

மனிதவாழ்வுக்கு தவம்தான் நிலைக்களன். அஃதில்லாமல் உண்மை வாழ்வெனும் மாளிகையைக் காண ஒருவராலும் முடியாது.

—ஓர் அறிஞர்.

நம் ஞான வாழ்வு வளமாகத் தவம் செய்வோம்! பயன் அடைவோம்!! புது வாழ்வு பெறுவோம்.

உங்கள் சந்தாவைச் செலுத்திவிட்டீர்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினசரி பூசை வழிகாட்டி

பங்குனி—1969

2.	ஞாயிறு	தவக்கால 2-ம் ஞாயிறு	[ஊ]
3.	திங்கள்	கிழமைப் பூசை	[ஔ]
4.	செவ்வாய்	கிழமைப் பூசை	[ஔ]
5.	புதன்	கிழமைப் பூசை	[ஔ]
6.	வியாழன்	கிழமைப் பூசை	[ஊ]
7.	வெள்ளி	கிழமைப் பூசை	[ஔ]
8.	சனிக்கிழமை	கிழமைப் பூசை	[ஔ]

சத்தியவேத பாதுகாவலன்

1969-ம் ஞெ பங்குனி மாதம் 1-ந் திகதி

செபமும் செயலும்

தேவனிடத்தில் ஒருவன் எவ்வளவுதான் அன்பு பூண்டவனாயிருப்பினும், அந்த அன்பை வெளிப்படையாகத் தனது செபவாழ்வின் மூலம் காட்டினாலும். அந்த அன்பு அவனை இறைவனுக்காகச் செயலாற்றும்படி தூண்டாவிட்டால் அது விரும்பப்படத் தக்கதென்று சொல்லமுடியாது. கிறிஸ்துநாதர் தாமே ஒருவருடைய வாழ்வு பலனளிக்கும்போது பிதாவானவர் மகிமைப்படுத்துகிறார் எனக் கூறியுள்ளார். உள்ளும் புறமும் தேவபக்தியில் ஊறியுள்ள பலர் அதற்கப்பால் செல்வதற்கு முயல்வதில்லை. செயலாற்ற வேண்டி வரும்போது பின்வாங்குகின்றனர். தேவனுடன் சம்பாஷிப்பதில் இனிமை காண்கின்றார்கள். ஆனால், அவருக்காகச் செயலாற்ற, தம்மை ஒறுக்க, ஏழைகளுக்குப் பணிசெய்ய, பாவிகளைத் தேடி மனந்திருப்ப, துன்பதுரிதங்களை நன்மனதோடு ஏற்றுக் கொள்ள முன்வரத் தயங்குகிறார்கள். பக்தராகத் தோற்றமளிப்பவரும் உண்மையிலேயே பக்தராக இருப்பவருங்கூட கடின உழைப்பைவிடச் சுக வாழ்வையே விரும்புகின்றனர். ஆனால், இவர்களது உழைப்பு திருச்சபைக்குத் தேவைப்படுகிறது என்பதை மறந்துவிடுகின்றனர். உலகமானது வேலையாட்கள் தேவைப்படும் ஒரு மாபெரும் வயலுக்கு ஒப்பிடப்பட்டுள்ளது. ஆகவே, எந்த வேலையாளும் ஒதுங்கியிருப்பது அவ்வேலையைத் தாமதப்படுத்துவதாகும்.

செபம். நல்வாசனை, தியானம் என்பவற்றின்மூலம் ஒளியும் பலமும் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பது மெய்யே. ஆனால், அவற்றைப் பெற்றவுடன் ஏனைய மக்களுடன் அவற்றைப் பகிர்ந்துகொள்ளப் புறப்பட்டுச் செல்லவேண்டும். இதுவே எமது ஆண்டவரும் அவருக்குப்பின் அப்போஸ்தலரும் அனுசரித்த வழியாகும்.

எனவே, சிந்தனையும் செயலும் ஒன்றையொன்று தொடர்வதுபோல். செபமும் செயலும் ஒன்றையொன்று தொடரவேண்டும். இவற்றுள் ஒன்றை மிகைப்படுத்தி மற்றதை அலட்சியம்செய்வது மனித வாழ்வுக்குக் குறைபாடு ஏற்படுத்துவதாகும்.

செபத்துக்கும் செயலுக்கும் அடிப்படையான வேறுபாடு உண்டு. ஒரு மனையாள் கணவனுடன் சம்பாஷிக்கும்போது அவனைக் கண்முன்னே காண்கிறாள். தனது அன்பை வெளிப்படையாகக் காட்டுகிறாள். அவளது சிந்தனை அவனைப்பற்றியதாகவே இருக்கிறது. ஆனால், அவள் சமையல்செய்யும்போது, வீட்டைச் சுத்தம்செய்யும்போது, கோழிகளுக்குத் தீனி போடும்போது கணவனுடைய எண்ணமாகவே இருப்பதில்லை. தான் செய்யும் கருமத்தைப்பற்றித் தான் சிந்திக்கிறாள். ஆனால், தான் செய்வன யாவும் கணவனின் நல்வாழ்வுக்கு உதவவேண்டும் என்பதே அவளது நோக்கமாகும். இதைப்போலவே தான் செபம் செய்யும்போது இறைவனைக் கண்முன்னைக் கண்டு அவருடன் சம்பாஷிக்கிறோம். செயலாற்றுகையில் கருமத்தில் கண்ணைபிருப்பினும் அதை அவருக்காகவே செய்கிறோம். இவ்விதமாக இறைவன் சிருஷ்டித்த பொருள்களின் மூலம், அவற்றை மக்களுக்குப் பயன்படுத்த நாம் ஆற்றும் தொழிலின்மூலம் தேவனை மகிமைப்படுத்துகிறோம்.

தேசீயசினொட் செயற்குழு மீளவும் கூடுகிறது

இலங்கையின் பல மேற்றிராசனங்களிலுமிருந்துதெரிந்தெடுக்கப்பட்ட செயற்குழு மாசிமாதம் 28-ந் திகதிதொடக்கம் பங்குனி 2-ம் திகதி வரையும் கொழும்பு அதி மேற்றிராணியார் இல்லத்தில்கூடி ஆலோசனைகள் நடத்த இருக்கின்றது. இவ்வருடத்தில் நடக்க இருக்கும் தேசிய சினொட் கூட்டத்துக்கு ஆயத்த வேலைகள் செய்வதற்காகவே இச் செயற்குழு கூடுகின்றது.

தபசுகாலம் நம்பிக்கையின்காலம்

(பி. ஜே. அமிர்தநாயகம்)

காலதேச எல்லைக்குள் உருவாக்கப்பட்ட சகோதரத்துவம் நீரின்குமிழிபோல் சிதைவடைகிறது. அவ்ஐக்கியத்தில் நிரந்தர வல்லமையில்லை. ஆனால், கிறிஸ்துவால் தன்பிதாவில்உருவாக்கப்பட்ட சகோதரத்துவமோ என்றும் நிலைத்திருக்கும். அதற்கு மனுமகனுகிய தேவமகனே காரணம். அவரே அதனின் உயிர்நாடியாய் இருக்கிறார். கிறிஸ்துவை விசுவசிப்பவன் கிறிஸ்துவில் நம்பிக்கை வையாது எப்படி இருப்பான். அவரின் பாடுகளும் மரணமுமே அவனுக்கு நம்பிக்கை அளிக்கிறது. ஏனெனில் கிறிஸ்து மாத்திரமே மரணத்திலிருந்து உத்தானமானார். பாவத்தால் வந்த சாவுக்குக் கிறிஸ்துவே விமோசனம் அளிக்கிறார். எப்படி பாரோனின் அடிமைத் தனத்திலிருந்த இஸ்ரயேல் மக்களுக்கு மோயீசன் நம்பிக்கையாயிருந்து வாக்குப்பண்ணப்பட்ட அவர்களின் தேசத்தில் சுதந்திர மக்களாக அவர்களை அழைத்துச்சென்றாரோ அதேபோல் மரணத்திலிருந்து உத்தானத்தால் நித்தியத்தை அடைந்த மனுமகனுகிய தேவமகன் அவருடைய சிலுவையைத் தரித்துக்கொள்ளும் எல்லாக் கிறிஸ்துவர்களுக்கும் தனது நித்தியசீவியத்தை அளிக்கிறார். மரணமே உன் வெற்றி எங்கே? இதற்கே தேவன் மனிதனானார். சகலமனிதரின் தோஷத்தைத் தன்மேல் சுமந்து தனது பாடுகளால் பரிகாரம் செய்தார். எவ்விதபாவியானாலும் கிறிஸ்துவில் நம்பிக்கை கொள்ளலாம். ஏனெனில்அவர் என்றும் பிதாவுக்கு மிகவும் பிரியகுமாரன். மனுமகனானாலும் அவர் என்றும் தேவமகன். அவரைக் காண்பவர் என்றும் அவரில் அவரின் பிதாவைக் காணலாம்.

இதோ!
மனிதனின் தாயார்

தேவதாயார் இதோ மனிதனின் தாயார். தாயைப்போல் பிள்ளைஎன்பான் தமிழன். பிள்ளையைப்போல் தாய் என்றார் தேவன். யேசுதேவன் அவரே தன்தாயைத் தெரிந்துகொண்டார். அவளை இரட்சணியவேலைக்குத் தெரிந்துகொண்டார். அவ்வேலைகல்வாரியில் எல்லாம் முற்றிற்று என்றார் யேசு. எப்படி நின்றார். தேவதாய் யேசுவுடன் கல்வாரியில் அவருக்குப் புறத்தியாகவா? இல்லைஇல்லை. 33 வருடங்களின்முன் தன்தாய் உதரத்தில் அவளைத் தரித்துக்கொண்ட தேவதாய் இப்போ எல்லா மனுக்குலத்திற்காகவும் சிலுவையடியில் புனிதபவுல் கூறுமாப்போல், "சிலுவையில் அறையுண்ட கிறிஸ்துவை" தரித்துக்கொண்டார். இவளேபூசையைமுழுமையாகக்கண்டார். இவளேநிவ்விய சிலுவைப்பலியில் பூரணமாகப் பங்குபற்றினர். ஏனெனில் இவ பரலோகத்திற்கும், பூலோகத்திற்கும் தாயாகவும் இராக்கினியாகவும் என்றும் இருக்கிறார். நாம் பூசையைக் கண்ணால் காண்கிறோம் மெய். ஆனால், தேவதாயாருடன் யேசுவைத் தரித்துக் கொள்கிறோமா? யேசுவோடு ஐக்கியம் அவர் பிதாவின் சித்தத்தால் சிலிக்கிறோமா? பரமண்டலங்களில் இருக்கிற பிதாவின் சித்தம் எங்கள் போசனமும் பானமுமாய் இருக்கிறதா? அகிலிருந்து எங்கள் ஞானப்பெலனைப் பெறுகிறோமா? அப்போதான் யேசுவோடு மரித்து அவரின் உத்தான மகிமையில் பங்கு பெறுவோம். இதற்கே யேசுவின் ஞானஉடலின் தாயாகிய திருச்சபை தபசுகாலத்தில் சிலுவையில் அறையுண்டயேசுவைத் தரித்துக்கொள்ளும்படி தவத்தின் சிலியத்திற்கு அழைக்கிறது.

இதோ மனிதன்!

பிலாத்து நல்லவன். ஆனால் நன்மைத்தனத்துக்குரிய ஓர்மமில்லாதவன். இழகிய மனமுடையவன். ஆனால் இந்த மனம் பயத்தால் ஆனது. யூதர் யேசுவைச் சாட்டையால் அடிக்கும்படி அவரைக் கேட்கவில்லை, அவருக்கு முன்மொழிதரித்துப் பரிகாசம் பண்ணும்படி கேட்கவில்லை. இவைகள் பிலாத்துவின் உபாயங்கள். சிலுவையில் அறையும்படியே யூதர்கள் பிலாத்துவைக் கேட்டார்கள். அவரைக் கொலைசெய்யும்படியே கேட்டார்கள் பிலாத்து ஓர் உபாயத்தைக் கையாண்டான். யூதர்களின் மனம் இழகுமென்று நினைத்தான். யேசுவின் தோற்றத்தை ஒரு பரிதாபநிலையில் காட்ட நினைத்தான். யேசுவை இவ்வாறு காட்டினால் அவரை மரணத்திலிருந்து காப்பாற்றலாம் என நினைத்தான். ஆனால் யூதர்கள் அப்படி நினைக்கவில்லை. அவர்கள் அவரைச் சாட்டைகளால அடிக்கவும் கேட்கவில்லை. இந்தப் பரிதாபநிலையில் பார்க்கவும், விரும்பவுமில்லை. ஆனால், மனிதனுகிய யேசு தேவனுமாயிருந்தார். அவர் அன்பர். தனது அன்பர்களுக்காக இந்நிலையிலவர அனுதியிலேயே சித்தமானார். காலவரம்பில் தோன்றியயேசு காலத்திற்கு அப்பாலானவர். அவர் அன்பர். அவரின் வழியும் அன்பே. மனித இரட்சணியத்திற்குப் பிலாத்து விரும்பாத சிலுவையின்கொலையும் தேவை. யூதர்கள் விரும்பாத சாட்டைகளின் அடிகளும் தேவை. வார்த்தையானவர் மாமிசமானார். நித்திய அன்பர் சிலுவையின் வழியாய் தமது அன்பர்களைச் சீவிக்கச் செய்யச் சித்தமானார். நித்திய அன்பர் சாட்டைகளின் இடிகளாலும் சகலருக்கும் விமோசனம் பெறச் சித்தமானார்.

கிறிஸ்து திராட்சைக் கனி

கிறிஸ்து திராட்சைக் கனி. கிறிஸ்தவன் கிறிஸ்துவின் மதுரத்தால் விமோசனம் பெற்றவன். கிறிஸ்துவால் சீவிப்பவன். கிறிஸ்துவின் விலைமதிக்கப்படாத இரத்தத்தால் மீட்கப்பட்டவன். எப்படி தாய் தன் சீவிய அமிர்தத்தைத் தன்பிள்ளைக்கு மறுப்பான். தாய்மறந்தாலும் தான் மறவேன் என்றார் தேவன். அவர்வாக்கு என்றும் தவறாது. கிறிஸ்துவாகிய தேவகனி போதிய அமிர்தம் அளிக்கப் பிலாத்துவே வழி கோலுவான். அதைச் சாட்டையால் அடிப்பான். அதில் சற்றேனும் இரசம் மிகுந்து இராதமட்டும் அடிப்பான். ஏனெனில் அதில் எல்லோரினதும் இரட்சணியபானம் அடங்கியிருக்கிறது. சிலுவையில் உயர்த்தப்பட்ட யேசு தமது ஐந்துதிருக்காயங்களாலும் இத்தேவ அமிர்தத்தை உலகுக்கு அளிப்பார். சிலுவையில் அறைவதைப் பிலாத்து விரும்பவில்லை. சாட்டைகளால் அடிப்பதை யூதர்கள் யோசிக்கவுமில்லை. ஆனால் தேவஅன்பர் சித்தமானார். ஏனெனில், அவர்தம் பிதாவுக்குச்சுவீகரிக்கும் சகலஞானப்பிள்ளைகளுக்கும்என்றுமவிடாய்தோன்றுத ஞானச்சீவிய ஊற்றைத்திறந்து வைப்பார். கிறிஸ்தவனே! இன்னும் பரவசநிலைமை. யேசு தம் விலைமதிக்கப்படாத இரத்தத்தை உனக்கு அளிக்கவில்லையா? உலக மாய்கைகள் மத்தியில் இருந்தாலும் கிறிஸ்துவின் தேவாமிர்தம் நித்திய ஞானமெழுச்சிக்குப் போதாதா. தன் தகப்பனின் வீட்டை விட்டு ஊதாரியாய்ப் போய்ச் சோர்வடைய வேண்டுமா? எங்கள் இளமைக்கு மகிழ்ச்சியளிக்கும் சர்வேசுரன் வீட்டில் வாசஞ்செய்வது என்றும் நலமே!

அரிய ஆன்ம தொடர்பு

இலங்கைவர்த்தகவிவகார மந்திரியாகக் கடமையாற்றுகின்ற திரு. ஹியூ. பெர்ணாந்து அவர்களது குடும்பத்துக்கும், தென்மேற்குப்பகுதியிலுள்ள லுனுவிலா விசாரணைப்பங்குக் குருவானவருமாகிய வண. தாமெல் சுவாமியாருக்கும் பலவருடகாலமாக விசாரணைப்பங்கு சம்பந்தமான தொடர்புகள் இருந்துவருகின்றன. இருபகுதியினரும் இத்தொடர்புபற்றிப் பெருமையுடன் பேசிக்கொள்கின்றனர். திரு. ஹியூ பெர்ணாந்து அவர்களது திருமணத்தைக்கோவிலில் ஆசீர்வதித்த அதே குருவாகிய காமெல் சுவாமியாரே அவரது மூத்த புதல்வியாகிய "ஐவி" என்பவருக்கு ஞானஸ்நானம் அருளியவர். சென்ற வருடம் ஐவியின் திருமணத்தை ஆசீர்வதித்தவரும் அவரே. இவ்வருடம் ஐவியின் மூத்தகுழந்தைக்கு ஞானஸ்நானம் அருளியவரும் அவரேயாம்.

ஒரு பொருட்காட்சி

மரியாயின் சேனைக்குச் சேர்ந்த பல பிரிவுகள் கொழும்பில் சித்திரைமாதம் கொட்டாஞ்சேனை சென்பெனடிக்ஸ் கல்லூரியில் ஒரு பொருட்காட்சி நடத்தத் தீர்மானித்திருக்கின்றனர். இதன் நோக்கம் தேவ அழைத்தலை நம் இளைஞர் மத்தியிற் பெருக்குவதே. பலவகையான சித்திரவேலைகளும் புள்ளிவிபரங்களும் படக்காட்சிகளும் இக்காட்சியில் இடம்பெறும். தேவ அழைத்தல் தினத்தை அதிமேற்றிராசனத்திலுள்ள யாவரும் தேவத்தையில் சென்றவாரம் மிகவிமரிசையாகக் கொண்டாடினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தினால் ஏற்பட்ட பயன் என்ன? —

(பி. சவரிமுத்து)

1962-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 11-ந்திகதி 23-ம்அருளப்ப பாப்பரசரால் நிறுவப்பட்டு 1965-ம்ஆண்டு மார்கழி மாதம் 8-ந்திகதி 6-ம்சின்னப்ப பாப்பரசரால் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட இரண்டாம்வத்திக்கான்சங்கமானது உலக சரித்திரத்திலும், பிரதானமாகத் திருச்சபையின் வரலாற்றிலும் ஒரு விசேஷ சம்பவமாகத் திகழ்கின்றது அன்றே!

இச்சங்கமானது அகில உலக ஆயரின் போவையாகத் திகழ்கின்றது. அனைத்துலக ஆயர்களும் அங்கு சமுகமளித்துத் திருச்சலபையின் மறுமலர்ச்சிக்கு வேண்டிய விடயங்களை நன்கு அலசி ஆராய்ந்து பல முடிவுகளைச் சாதனைக்குக் கொண்டுவரத் திட்டமிட்டனர். வழிவகுத்தனர். ஆனால், உண்மையாகவே "அச்சங்கத்தின் இறுதிகாளே அச்சங்கத்தின் ஆரம்பகால்" என்று கூறுவது மிகவும் பொருத்தமுடைத்து. அன்று தொட்டு இன்று மட்டும் ஆண்டுகள் மூன்று கழிந்துவிட்டன. இக்கால எல்லைக்குள் திருச்சபையில் என்ன மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன? எவ்வித மறுமலர்ச்சி கத்தோலிக்க மக்களில் ஏற்பட்டிருக்கின்றது? என்று கேட்பது தகுதியானதொன்றே.

இத்திருச்சங்கம் எவ்வாறு பயனளித்திருக்கிறது என்று நாம் சாதாரணமக்களைக் கேட்டால் பலரும் பலவிதமான விடைகளைக் கூறுவர். ஒரு சிலர் "பூசைப்பலி சுதேச மொழியில் ஒப்புக்கொடுக்கப்படுகிறது" என்று கூறுவர். வேறு சிலர் "இப்போது குருவானவர் பூசை வேளையில் மக்களைப் பார்த்துக்கொண்டே செபிக்கிறார்"என்பர்.

இன்னும் வேறு சிலர் "இப்போது திருச்சபையில் கூடிய சுதந்திரம் அளிக்கப்படுகிறது" என்பர். இன்னும் சிலர் "பொதுநிலையினருக்குத் திருச்சபையில் கூடுதலான பங்கு அளிக்கப்பட்டிருக்கிறது"என்றும், "திருச்சபையின் வாழ்வில் பொதுநிலையினர் உயரிய இடத்தைவகிக்கின்றனர்", என்றும் "துறவிகளின்(கன்னியர்களின்)உடையில் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன" என்றும் பலவாறு கூறுகின்றனர்.

ஆனால், இரண்டாம் வத்திக்கான் சங்கம் நிறுவப்பட்ட முக்கிய நோக்கத்தைச் சாதாரண மக்கள் முற்றாக உணர்ந்திருக்கின்றார்களோ வென்று ஆராய்ந்துபார்த்தால் "இல்லை" என்றே பெரும்பாலும் நாம் விடைகூறவேண்டியிருக்கிறது. எங்கள் நாட்டில் காணப்படும் சமயபக்தர்களுக் கிடையில் சகோதரத்துவமும், பரஸ்பர உணர்ச்சியும் நிலவுகிறதா? எங்கள் நாட்டுக்குச் சேர்ந்த பழக்க வழக்கங்கள், உடுப்பு வகைகள், உணவு வகைகள், உண்டாட்டுக்களியாட்டு அனுசாரணைகள் யாவும் ஒவ்வாதவை என்ற ஒரு குறுகிய மனப்பான்மையுடன் நாம் வாழ்கிறோமா? எங்கள் நாட்டின் அரசியல் சமூகவியல், கலைகள் முதலிய துறைகளில் நாங்கள் முழுமனதோடு ஈடுபட்டு நாட்டு மக்களின் நன்மைக்காக நாம் உழைக்கிறோமா? அன்றேல் "நாமும் எம்பாடும்" என்று சொல்லிவிட்டு அரசியல், சமூகவியல், கலாசாரம் போன்ற துறைகளில் சற்றும் அக்கறையற்றவர்களாக,நடைப்பிணங்களாக கத்தோலிக்காராகிய நாம் எமது வாழ்காட்களை வீண்காட்களாகக் கழித்து வருகிறோமா?

இயற்கையிலுள்ள வாறு மறுமலர்ச்சி ஏற்படவேண்டுமாயின் சிலபல கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். பல தியாகங்களை நாம் செய்யவேண்டியவர்களாயிருக்கிறோம். "திருச்சபையானது குருக்களுக்கும் துறவிகளுக்கும் கன்னியர்களுக்கும்தான் சொந்தமானது; பொதுநிலையினருக்கு அங்கு இடமில்லை, பங்கில்லை" என்று கூறி வாழ்ந்தது அந்தக்காலம். கிறிஸ்துவின் நற்செய்தியை உலகெங்கும் பரப்பி மக்கள் அவரை அறிந்து திருச்சபையில் சேரப்பண்ணுவது அவர்கள் பாகதியடையப்பண்ணுவது குருக்களின் பணியென்று பொதுநிலையினர் எண்ணியது அந்தக்காலம். என்வாழ்க்கையில் நான் தனிப்பட்ட முறையில் இவ்வுலகில் ஒரு புனித வாழ்வை வாழ்ந்து மறுவுலகில் மோட்சத்தை அடைவதே என் வாழ்வின் கதி என்றுஎண்ணியது அந்தக்காலம். இவ்வாறு இன்னும் பலசிந்தனைகளை நாம் அடுக்கிக் கூறமுடியும். ஆனால், இரண்டாம் வத்திக்கான் சங்கம் செய்த பல மாற்றங்களுள் முக்கியமானவை இரண்டு என்று சுருக்கமாகக் குறிப்பிடலாம். ஒன்று திருச்சபைக்குள்ளே உள்ள தொடர்புகள். மற்றையது திருச்சபைக்கும் வெளி உலகுக்கு முள்ள சமூகத் தொடர்புகள் எனலாம்,

யேசுக்கிறிஸ்துநாதரின் மறையுடலில் பொதுநிலையினர் அவயவங்களாக இருக்கின்றனர். எனவே, அவர்கள் இல்லாமல் திருச்சபை இல்லவே இல்லை என்ற உண்மையை இரண்டாம் வத்திக்கான் சங்கம் அழுத்தம் திருத்தமாக எடுத்து விளக்கியிருக்கிறது.

ஒரு கோயிலில் நடைபெறும் ஒவ்வொரு கிருத்தியத்திலும்பொதுநிலையினருக்கு இருக்கும் மறுக்கமுடியாத உரிமைகளையும் பொறுப்புக்களையும் இரண்டாம் வத்திக்கான் சங்கம் நன்கு வற்புறுத்தியிருக்கிறது. திருச்சபை ஒன்று என்ற உண்மையை ஏற்றுக் கொண்டுள்ளது அடித்தபடியாகத் திருச்சபை அதிகாரிகளும் அங்கத்தவர்களும் உலகில் வாழும் ஏனைய சமயத்தவர்களுடன் கொண்டிருக்கவேண்டிய உறவு கல்லெண்ணம் தொடர்பு ஆகியனவற்றை நன்கு விளக்கிருக்கிறது. திருச்சபையின் மக்களுக்குள்ள சமூகக் கடமைகள் நன்கு தெளிவாக்கப்பட்டிருக்கின்றன. எல்லாச் சமயத்தவர்களும் ஒரே இறைவனின் மக்கள், ஒரே இரட்சகரால் மீட்கப்பட்டவர்கள், ஒரே கதியை அடையவேண்டியவர்கள் என்றெல்லாம் நன்கு விளக்கப்பட்டிருக்கிறதே. எனவே, சகல மக்களிடையில் காணப்படவேண்டிய ஒற்றுமையின் அவசியத்தை இச்சங்கமும் அதனை நிறுவிய 23-ம் அருளப்பரும் தகுந்த விதமான முறையில் வற்புறுத்தியிருக்கின்றனர் எனலாம்.

கடமைக்கு கத்தோலிக்கனே?

(சில்லையூர் இல்லறத்தான்)

கடமை வீரர்!

"ஐயா காலமாகிவிட்டார். மற்றையோர்க்கும் அறிவித்துவிட்டு உடன் வரவும்" —சந்திரன். இது தந்தையை இழந்து இன்னலுறும் தனையனின் தந்திச் செய்தி. சந்திரனின் நிலை பரிதாபகரமானது. அவன் இதை அறிவித்தவர்களின் நிலையும் அப்படியே. ஆனால்..... இவ்வாசகத்தை ஏற்று ஒரு மூலையிலிருந்து மறுமூலைக்கு அறிவித்த உத்தியோகத்தனே எவ்வித சலனமுமின்றி அதைத் திரும்பத் திரும்ப வாசித்து மறுமூலைக்கு அனுப்புகிறான். இது அவனின் கடமை.

கணற்றுக்குள் இருந்து வெளியே எடுத்துப் போடப்பட்டிருக்கிறது ஒருவனின் உயிரற்ற சடலம். அதைச்சூழ வரச் சுற்றிநின்று உற்றார் உறவினர் அழுது புலம்பிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஒருவர் மாத்திரம் யார்யாரையோ கூப்பிட்டு ஏதேதோ விசாரித்துக் கொண்டிருக்கிறார். அட பாவி மனிதனே! என்ன இவ்வளவு பேர் குழுமிக்கொண்டிருக்கையில் நீ என்ன வேடிக்கை நடாத்துகிறாய்! பாவம் அவர் என்னசெய்வார். அவர்தான் திடீர் மரணவிசாரணை அதிகாரியாச்சே — அதுதானே அவரின் கடமை! இப்படி எத்தனை உத்தியோகத்தர்கள், உயர் அதிகாரிகள் தங்கள் கடமையை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள் — தினம் தினம்.

கத்தோலிக்கர்!

இன்று ஞாயிற்றுக்கிழமை ... ஓ மறந்தே விட்டேன். பூசைக்குப் போகணுமே... சி மாலையில் பூசை நடக்கும் தானே, மாலையில் பார்த்துக் கொள்வோம் ஒருவன்— இன்னொருவன் இன்றைக்கு ஞாயிற்றுக்கிழமை கொஞ்சம் பிந்தி எழுந்திருக்கலாம். ஏனெனில் இரண்டு மணித்தியாலங்கள் கழித்து ஆபீசுக்குப் போகலாம்தானே. அதற்கு வசதியிருக்கு —என் நான் கத்தோலிக்கன்.

இன்றைக்குக் கோட்டுத் தவணை. சீக்கிரமாய்ப் பிறக்காசியிடம் போய் அவரையும் கூட்டிக்கொண்டு ..... "எடி கெதியாய் வெளிக்கிடு; இன்றையோடு பக்கத்து வீட்டுப்பயல் வேலியை ஒருமுழம் தள்ளிப் போடுகிறானு இல்லையா என்று பார்ப்போம். எல்லாம் நீ சொல்லுகிற சாட்சியில்தான் இருக்கு." கணவனும் மனைவியுமாக இறுமாப்புடன் செல்கிறார்கள் கோட்டிற்கு — உத்தம கத்தோலிக்கரில் ஒருசுகம்.

"என்னமேரி சண்டை..... உவள் மரியம்மாவின் மகள் என்னை மகளுக்கு அடிச்சுப் போட்டாள்; பார் பார் என்ன செய்கிறேன். அவளையும் அவளின் அடங்காப்பிடாரியையும் ஆண்டவராணை இருத்துபார்" ஆண்டவர்மேல் ஆணையோடு புறப்படுகிறான், அவரின் அடியாள் ஒருத்தி.

"பறைச் சின்னவன்வந்து கோவிலுக்குள் எனக்குப் பக்கத்தில் இருந்துவிட்டான். வரட்டும் வெளியாலே; அவனை ஒருகை பார்த்துவிட்டு வாறேன்." இதுகையுயர்த்துகிற்கும் கத்தோலிக்கன் ஒருவன்.

நற்செய்தி நவில்வது

"ஆண்டவருக்குரியதை ஆண்டவருக்கும், சேசாருக்குரியதைச் சேசாருக்கும் கொடுங்கள்; உங்கள் பகைவர்களுக்கு அன்பு செலுத்துங்கள்; உங்களைத் துன்புறுத்துவோருக்காகச் செபியுங்கள்;" "எங்களுக்குத் தின்மை செய்தவர்களுக்கு நாங்கள் பொறுக்குமாப்போல் எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும்."

"... முதலில் உன் சகோதரனுடன் போய் உறவாடிவிட்டு வந்து பலிசெலுத்து..."

நான் கத்தோலிக்கன்; "நான் வாழ்கிறேன்—நானல்ல — என்னில் கிறீஸ்து வாழ்கிறார்."

சிந்தனைச் சுடர்

1. தவறு செய்துவிட்டு தண்டனைக்கு பயந்து கடவுள் இல்லை என்பவனைவிட, தவறுகளுக்கு வருந்தி கடவுளை நம்புகிறவனே மன்னிக்கப்படுவான்.
—எர்ரகுலஸ்.

2. கடவுள் இல்லை என்பவன் மிருகமாகிவிடுகிறான். கடவுள் தன்மை இல்லாத மனிதன், பெருந்தன்மையற்ற இழிவான மிருகம். —பேக்கன்.

3. கோபத்தினால் மற்றவருக்குப் பதிலாக நம்மையே நாம் பழிவாங்கிக் கொள்கிறோம். —போப்.

4. குழந்தைகள் இல்லாவிட்டால் உலகம் சோகமானதாகிவிடும். கிழவர்கள் இல்லாவிட்டால் மனிதர்கள் இல்லாத உலகமாகிவிடும்.
—கோல்ட்ரிட்ஜ்.

5. சட்டங்கள் நம் இதயத்தில் எழுதப்பட்டிருக்கின்றன. மனமே அதன் சாட்சி. எண்ணங்கள் அவைகளை வெறுக்கின்றன அல்லது ஆதரிக்கின்றன. பரி. சின்னப்பர்.

6. நான் செய்தது கொஞ்சமே, ஆனால் நான் செய்ய வேண்டியது நிறைய உள்ளது.
—சுவாமி பேர்னர்.

7. ஏழைகளுக்கு உதவும் போது நீங்கள் எதைத் தருகிறீர்கள் என்று பார்க்காதீர்கள். ஆனால், எதைப் பெருகிறீர்கள் என்பதை நினைத்துப் பாருங்கள். —F. D. S.

8. ஒரு தருமஸ்தாபனத்திலிருந்து அடிபட்டு மருத்துவமனையிலிருந்த அதன் தலைவருக்கு வந்த தந்தி, தாங்கள் சுகம் பெற்று சீக்கிரமே திரும்பிவர ஓட்டெடுப்பு நடத்தினோம் ஆதரவு—8; எதிராக 7.
—கத்-டைஜஸ்ட்.

9. பெண்ணின் அன்பு தண்ணீரைப்போல் நிர்மலமாகவும், உயிரளிப்பதாகவும் இருக்க வேண்டும்; தெரிக்தோ, தெரியாமலோ அது நமது சமூகத்தில் வெறியூட்டும் கள்ளாக மாறியிருக்கிறது.
—காண்டேகர்.

10. உலகத்திலுள்ள ஒவ்வொரு உயிரும் பொருளும் மற்றவருக்காக, மற்றவைக்காகவே பயன்படுகின்றன. மனிதனுக்கு இடைத்திருக்கும் ஒரே வாழ்க்கையும் அன்புக்காகவே அர்ப்பணிக்கப்படுகிறது. அந்த வாழ்வுக்கு வழி வேறில்லை.
—சத்தியசுடர்

பொங்கி வருகிறது பங்குனி

மாசி மறைந்தது. எம் ஆசையும் நிறைவேறியது. சிங்கம் போல் பொங்கி வருகிறது பங்குனி. பங்குனி என்றால் எங்கும் உவகை பொங்கும்.

மானிலம் போற்றும் மாதவன் மாதம்தான் பங்குனி. பாரிலுள்ளோரெல்லாம் மாதவன் அருள்பெற துடியாய்த் துடித்து நிற்கின்றனர்.

யேசுவின் கைத்தாதையாய் கன்னிமரியின் பத்தாவாய் விளங்கும் புனித சூசையின் இனிய மாதம் தான் பங்குனி என்று எல்லோரும் சொல்லத் தெரிய வேண்டியதில்லை. தொழிலின் எழிலை எமக்கெடுத்துரைக்கும் புனித சூசையின் வழியை தொழிலாளராகிய நாம் பின்பற்ற வேண்டும். கடமை மிகுந்த குடும்பத்தலைவனாய் திருக்குடும்பத்திற்கு அவர் ஆற்றிய சேவைகளைக் குடும்பத் தலைவர்கள் கண்டு பாடிக்கவேண்டும். கற்பாறையாகிய எம் திருச்சபையின் காவலனாய் விளங்குபவரும் புனித சூசையே. நன்மரணத்தின் பாதுகாவலராய், கன்னியர் காவலராய், பிசாசுகளின் பயங்கரமாய் கோயாளிகளின் நம்பிக்கையாய் இவ்வாறு பல விதத்தில் சத்திய திருச்சபை அவரைக் கௌரவித்துள்ளது. இத்தகைய மகத்துவம்வாய்ந்த

இப்புனிதரை நற்செய்தி "தீதி மான்" என்று மட்டும் கூறுகிறது. இந்த ஒரு சொல்லில் தான் புனித சூசையப்பரின் வாழ்க்கை அடங்கியிருந்தது. திருச்சபை பங்குனிமாதத்தை மாதவன் சூசைக்கு அர்ப்பணித்துள்ளது. ஆம், சூசையப்பரிடம் போவோம்; வரம் பல பெறுவோம்.

பொங்கும் பங்குனி எங்கும் பொழிக?

யேசு மரி கல்சூசை முனியே
நேசம் தாழ்மை தருவீரே.

இ. பேர்ணட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்ச். மாற்கு சுவிசேஷம்—தொடர்ச்சி

அர்ச். மாற்கு சுவிசேஷத்திலிருந்து பரீட்சைக்குக் கொடுபடக்கூடிய வினுக்கள்

(சென்றவாரத் தொடர்ச்சி)

1. கிறிஸ்துவின் மரணத்தையும் பாடுகளையும்பற்றிய மூன்று முன்னறிவித்தல்களுக்கிடையில் இருக்கும் ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய்க (8 : 31, 9 : 30, 10 : 33—34).

முதலாம் முன்னறிவித்தலில் நாலு பிரதான அம்சங்களுண்டு : அநேக பாடுகள் படவேண்டும்; மூப்பராலும் வேதபாரகராலும் பிரதான ஆசாரியராலும் ஆகாதவனென்று தள்ளப்படவேண்டும்; கொலையுண்ணவேண்டும்; மூன்று நாட்களுக்குப்பின் உயிர்த்தெழ வேண்டும்.

இரண்டாம் முன்னறிவித்தலில் 1-ம், 3-ம், 4-ம் அம்சங்களோடு இன்னொரு அம்சம் கூடுதலாயிருக்கின்றது; அதாவது மனுமகன் மனிதர்களுக்குக் கையளிக்கப்படுவர் என்பதாம்.

மூன்றும் முன்னறிவித்தலில் முதல்கூறிய அம்சங்களோடு இன்னும் ஐந்து அம்சங்கள் கூட்டப்பட்டிருக்கின்றன: (i) மனுமகன் யாருக்குக் கையளிக்கப்படப்போகின்றார் — பிரதான ஆசாரியருக்கும், வேதபாரகர்களுக்கும், மூப்பர்களுக்கும். (ii) மரணத்தீர்வை. (iii) பிறஜாதியாரிடத்தில் அவரை ஒப்படைப்பார்கள். (iv) அவரை நகைத்து அவர்மேல் துப்புவார்கள். (v) சாட்டையால் அடிப்பார்கள்.

2. கிறிஸ்து ஏன் மறுரூபமானார் (9 : 1—9) :

(i) பரிசேயர் வானத்திலிருந்து தமக்கு ஓர் அதிசயத்தைத் தரும்படிகேட்டார்கள். "இந்தச் சந்ததிக்கு ஓர் அதிசயமும் கொடுக்கப் படுவதில்லையென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்கின்றேன்" என்றார் (8: 11—12). இவ்வாறு கிறிஸ்து பரிசேயருக்குத் தனதுதெய்வீகத்தைநிரூபிக்க வானத்திலிருந்து ஓர் அதிசயத்தைக் கொடுக்க மறுத்தார். ஆனால், அதேயடையாளத்தை மறுரூபமான சம்பவத்தின் மூலம் தம் சிஷ்யர்களுக்குக் கொடுக்கின்றார். பரிசேயர் அகங்காரிகளாகவும் கல்நெஞ்சராகவும் இருந்ததினால் அவர்களுக்கு ஓர் அடையாளம் கொடுக்கமறுத்தார். ஆனால், தாழ்மையுள்ள சீஷர்களுக்கு அவ்வடையாளத்தைக் கொடுத்தார். இதனால் கிறிஸ்துவின் வெளிப்படுத்தல்களுக்கு நாம் சாட்சிகளாயிருக்கவேண்டுமாயின் எமக்குத் தாழ்மை அவசியம் என்பதை மறுரூபமான சம்பவத்தில் படிப்பிக்கின்றார்.

(ii) இராயப்பர், அருளப்பர், யாகப்பர் ஆகிய மூன்று சிடர்களும் தனது மறுரூபத்திற்குச் சாட்சிகளாக இருக்கும்படி கிறிஸ்து அவர்களைப் புறம்பாகத் தன்னோடு தபோர் மலைக்குக் கூட்டிச் சென்றார். யூதசட்டத்தின்படி ஒரு சம்பவத்திற்கு மூவர் சாட்சிகளாக இருக்கவேண்டும். இச்சட்டத்தைப் பூர்த்திசெய்யவே கிறிஸ்து தன்னோடு மூன்று சிடர்களைக் கொண்டு சென்றார். இதே மூன்று சிடர்கள் தான் பூங்காவில் படப்போகும் பாடுகளுக்குச் சாட்சிகளாக இருப்பார்கள். அப்பொழுது அவர்களுடைய விசுவாசம் தளர்ச்சியடையாமல் இருக்கும்படியே கிறிஸ்து அவர்களுக்கு முன் மறுரூபமானார்.

(iii) மறுரூபமான சம்பவத்தில் கிறிஸ்துவின் இருபக்கங்களிலும் எலியாசும் மோயீசனும் தரிசனமானார்கள். பழைய ஏற்பாட்டைக் குறிக்கும் மோயீசனும் தீர்க்கதரிசனங்களைக் குறிக்கும் எலியாசும் கிறிஸ்துவுடன் காட்சியளித்ததினால், தான் பழைய ஏற்பாட்டை அழிக்கவல்ல அதைநிறைவேற்றவே வந்தார் என்று கிறிஸ்து கூறுவதுபோலாயிற்று. ஆயினும் தான் இவ்விருவருக்கிடையில் மத்தியஸ்தானத்தை வகித்ததனால்தானே பழைய ஏற்பாட்டிலும் தீர்க்கதரிசனங்களிலும் பார்க்க உன்னதமானவரெனக் காண்பிக்க விரும்பினார்.

3. இச்சுவிசேஷத்தில் தேவஇராட்சியத்தைப்பற்றிக் கூறப்பட்டிருக்கும் ஒவ்வொரு உவமையும் தேவஇராட்சியத்தின் என்னவிசேஷ அம்சத்தைக் காட்டுகின்றது? (4 : 1—34).

(i) விதை விதைக்கின்றவன் உவமை. தேவவாக்கியத்தை நல்மனதோடுகேட்டு அதற்கு உதாரகுணத்தோடு செவிசாய்ப்போமானால் எமது ஆத்துமத்திற்கு ஆளவுகடந்த நன்மை உண்டாகுமென்பது இவ்வுவமையின் விசேஷ அம்சம்.

(ii) தண்டின்மேல் வைக்கப்பட்ட தீபம் (4 : 21) : இவ்வுவமையினால் கிறிஸ்து தனது அப்போஸ்தலர்களை ஞானத்தீபங்களாக இருக்கும்படி அவர்களை ஆயத்தப்படுத்துகிறார். பின்பு அவர்கள் தங்கள் போதனையினாலும் முன்மாதிரிகையினாலும் உலகத்தின் வெளிச்சமாக இருப்பார்கள். அதனால், அப்போஸ்தலர்கள் மாத்திரமல்ல ஒவ்வொரு கிறிஸ்தவனும் உலகத்தில் ஒளியாயிருக்க வேண்டுமென்பது இவ்வுவமையின் விசேட அம்சமாகும்.

(iii) காணுதல் வளரும் விதை (4 : 26) : தேவவாக்கியத்திற்குச் செவிசாய்த்தால அது, நம்மையறியாமலே ஆத்துமத்தில் பல்வேறு நன்மைகளை விளைவிக்குமென்பது இவ்வுவமையின் விசேட அம்சமாகும்.

(iv) கடுகுமணியின் உவமை : சருவேசுரனின் திருச்சபை ஆரம்பத்தில் கீழ் நிலையிலிருந்து தொடங்கிப் பிறகு சகல ஜாதிசனங்களுக்கு மிடையில் பரவித் தனது நன்மைகளை அவர்களுக்குள் பங்கிடுகின்றது. இதுவே இவ்வுவமையின் விசேட அம்சமாகும்.

4. கப்பர்னவும் ஊரில் அசுத்த அரூபி பிடித்தவனைக் குணமாக்கிய சம்பவத்திலிருந்து இச்சுவிசேஷம் ரோமருக்கு எழுதப்பட்டதென எவ்வாறு நிரூபிக்கலாம் (1 : 21—28).

ரோமர் அதிகாரப் பிரியமுடையவர்கள்; கட்டளையிடுவதில் சாமர்த்தியமுடையவர்கள்; இதனால்தான் தனது ஊழியனைக் குணமாக்கும்படி கேட்ட ரோமச்சென்தூரியன் "குருவே நான் என் ஊழியனைப்பார்த்து: "போ" என்றால் போகிறான் "வா" என்றால் வருகின்றான்; நீரும் அவ்வாறு கட்டளையிட்டால் எனது ஊழியன் குணமடைவான் என்று மன்றாடினான் என மற்றைய சுவிசேஷங்களில் கூறப்பட்டுள்ளது. அதேபோன்று இச்சந்தர்ப்பத்திலும் கிறிஸ்து அசுத்த அரூபியை அதட்டி "நீ பேசாமல் இந்த மனிதனைவிட்டுப் புறப்பட்டுப்போ" என்கிறார். இதிலிருந்தும் இச்சுவிசேஷம் ரோமருக்கு எழுதப்பட்டதென்பது வெளிப்படை.

(வரும்)

யேசுவின் திரு அவதாரச் சித்திரம்

(வசன நடைக் கவிதை)

கானூர்க் கல்யாணமும் முதற் புதுமையும் :

கானூர்க் கல்யாணம் காணப்
போனார் யேசு, தாயும் போயிருந்தாள்!
வாயிலில் வாழை தோரணம், வனிதையர் தனம் போல்
வாய்த்த செவ்விள நீர்க்குலைகள்! வருவோர்க்குப்
பன்னீரும் பூவும் தெளித்துப்; பால்வண்ணப்
பொட்டுமிட
வண்ணப் பெண்கள்! வரவேற்பு தடபுடல்!
வீடு நிறைத்து வழியப் பெண்கள்! ஆண்கள்
கூடத்திற் குப்பையாய்க் கிடந்தனர்!
குழந்தைகளோ, அங்கும் இங்கும் சிரிந்தனர்,
இள மங்கையர் வரவில்லை!
கீட்டி முடக்கிக் கிடந்தனர் பலர்—
ஆட்டும் பாட்டுமாகக் கழித்தனர் சிலர்—
அப்போது
விருந்துக்கு நேர மென்றனன் வேலையாள்—
அங்கு
இருந்தவரெல்லாம் எழுந்து
தள்ளித் தள்ளி நெருக்கி இருந்தனர்
எள்ளுப் போட இடமில்லை!
ஆரம்பமாயிற்று விருந்து!
ஆகா! எத்தனை கறிகள்! எத்தனை வகைகள்!
எத்தனை சுவைகள்!
நீர் ஊறிற்று வாயிற் சிலருக்கு, நறு நெய் மணம்
ஊர்ந்த தெங்கும்; உறிஞ்சிக் கொண்டனர்!
சென்றது சில மணி செஞ்சோறு படைக்க!
நன்றாக உண்டனர்; நல்ல வேட்டை!
முடிந்தது ஒருவகையாய் உணவு—இனிக்
குடிவகை ஆரம்பம்!
சாடி நிறையத் திராட்சை ரசம்—நன்கு
பாடிப் பாடி இழுத்தனர்; பாவி யயிறுகள்!
கானூர் கல்யாண விருந்தின்
கானவிதக் கோலமிது!
இங்குதான் அமலன் யேசு—ஆரும்
காணுத புதுமை செய்தார்; எப்படியெனில்

(வேறு)

விருந்தினரிடையே வேலையாட்கள்
விளம்ப இரசம் இல்லை யென
அருகிலிருந்த மகனைப் பார்த்து
அன்னை அவர்கள் நிலை சொல்ல,
'என்னை நீ தொந்தரவு செய்வ தென்னை?
இன்னு மென் காலம் வரவில்லை
யென்பதும் நீ அறியாயோ'
யென் றெண்கள் யேசு பிரான்.
மறுத்துத் தன் தாயினுக் குரைக்க
மாதாவோ வீணு ரைப் பார்த்து
'பொறுத்தவர் செய்வதைச் செய்யுங்கள்' என்று
புன்னகையோடு புகன்றாள்!
கண்ணிற்கு முன்னே கிடந்த
கற்சாடி ஆறையுங் கண்ட
மன்னவன் யேசு அவைகளைத்
தண்ணீரால் நிரப்புக வென்று,
பக்கத்தில் நின்ற பணியாளிடம்
'பாத்திரத்து நீரில் ஓர் சொட்டெடுத்து
தக்கத்தில் இருந்த தலைவனிடம்
கொடுங்கள் ருசி பார்க்க' என்றார்.
'எங்குமே இது போன்ற இரசத்தை
என்றுமே யான் சுவைத் ததில்லை
இங்குவா' என்று மணமகனை
அழைத் தந்தத் தலைவன் சொல்வான்,
'இதுவரை நாம் குடித்ததெல்லாம்
இரசமா? இல்லை, இல்லவே இல்லை' யென
புதிய இவ்விரசத்தைச் செய்த
போதனைப் புகழ்ந்தவன் நின்றான்.
'அற்புதம்' அற்புதம், என்றனர்
அவ்விரசம் அருந்தியவ ரெல்லாரும்
அற்புதம் செய்த அமலனே
அரும்ப ஓர் நகையோடு நின்றார்!

(வளரும்) **எஸ். அரியரெத்தினம்**

நன்றித்துதி

கைவிடப்பட்டவர்களின் பாதுகாவலரான புனித யூதாததேயுவிடம் நான் இரந்து கேட்டபடி எனது கணவரிடம் அநேக வருடகாலமாக இருந்துவந்த குடி எனும் தீர்ப்பழக்கம் நீங்கலாயிற்று. நன்றியாக இதைப் பிரசுரிக்கிறேன். இவரின் நாமம் எங்கும் என்றும்புகழப்படுவதாக. இன்னும் எனது கருத்துக்கள் நிறைவேற வேண்டுகிறேன்.

Mrs. P. Peter

25/69.

திமிங்குப்பிள்ளை
பஸ்ரியாம்பிள்ளை சூசைப்பிள்ளை
அவர்களின்

8-ம் வருட மரண ஞாபகம்

தோற்றம்:	மறைவு:
4—10—1879	26—2—1961.

"ஆண்டவரே! இவருக்கு நித்திய இளைப்பாற்றியைத் தந்தருளும். இவர் மீது நித்திய ஒளி பிரகாசிக்கக்கடவது."

துயருடன் நினைவுகூரும்:
மனைவி, பிள்ளைகள்.
'ரட்னவில்லா'
கரம்பன், ஊர்காவற்றுறை.
24/69.

22-ம் வருட மரண ஞாபகம்

பிறப்பு:	இறப்பு:
9—3—1902.	6—3—1947.

இலங்கை அரசாங்க புகையிரதப்பகுதியில் கிறேற் வெஸ்ரேண் ஸ்ரேசன் மாஸ்ராகச் சேவைபுரிந்த எனது அருமைப் பத்தாவும், எமது பிரிய பிதாவுமான திரு. சிமான்பிள்ளை ஆரோக்கியநாதர் இவ்வுலகைவிட்டு மறைந்த 22-ம்வருடம் இம்மாதம் 6-ந்தேதி வியாழக்கிழமை (6-3-69) பூர்த்தியாகின்றது. அன்றினம் இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக மாதகல், அர்ச். தொம்மையப்பர் ஆலயத்தில் ஒரு திருப்பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும். இதனைக் கண்ணுறும் கிறிஸ்தவர்கள் இவரின் ஆத்ம இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளுமாறு தயவாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
மனைவி: மரியதாயகி ஆரோக்கியநாதர்
மக்கள்: டாக்டர் இம்மனுவேல் ஆரோக்கியநாதர், இம்மனுவல் நவரட்ணராசா (தீர்ப்பாசன இலாகா) இம்மனுவல் இக்னேசஸ் ரட்ணராசா.
மருமக்கள்: பிலோமினு ஆரோக்கியநாதர் (அப்போத்திக்கரி), ராசேஸ்.
23|69.

கொலைசெய்யச் சதியா?

எதிர்க்கட்சித் தலைவியான திருமதி சிறிமா பண்டாரநாயக்காவை இந்த மாசிமாதம் 9ஆம்திகதியன்று கொலை செய்வதற்குச் சதித்திட்டம் ஒன்று செய்யப்பட்டதாகச் சொல்லப்படுவது பற்றிப் பொலிசார் நடத்திவரும் விசாரணை ஏறக்குறைய முடிவடையும் நிலைக்கு வந்திருப்பதாகத் தெரிகிறது. எதிர்க்கட்சியைச் சேர்ந்த சிலமுக்கியஸ்தர்கள் கொடுத்த தகவலைத்தொடர்ந்தே இந்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டதாம்.

சாதிகசம்பத் சுவீப்

சாதிகசம்பத்தொத்தர்சுவீப்வருகிறசித்திரைமாதத்திலிருந்து மாதந்தோறும் நடத்துவதென்று தேசியலொத்தர்சபை முடிவுசெய்திருக்கிறது. இதுவரை இது மூன்றுமாதங்களுக்கு ஒருமுறையே நடத்தப்பட்டுவருகிறது. ஆனால், இதன் திக்கற்பில இரண்டு ரூபாவிலிருந்து ஒருரூபாவாகக் குறைக்கப்படும்.

திராட்சைச் செய்கை

இளவாலைப் பகுதியிலே இம்முறை திராட்சைச்செய்கை வெகுவாக அதிகரித்திருக்கிறது. வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட சிவப்புத்திராட்சையான புதியஇனத் திராட்சையே இப்போது அங்கு செய்கைபண்ணப்பட்டுவருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உட்புகுமுன்: செல்வி கபிரியேல் லாசான்ஸ் அவர்கள் இல்லறத்தூதுவர் சபைக்கு ஆறு வருடங்களுக்குத் தலைவியாகச் சென்றவருடம் ஆடித்திங்கள் 2-ம் திகதி முதல் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். இவ இச்சபையில் சேர்ந்த முதல் வருடங்களில் ஐக்கிய அமெரிக்காவில் உள்ள ரெக்ஸஸ் (Texas) என்னும் இடத்திற்கு அனுப்பப்பட்டு அங்கேஅவர்களின் முயற்சியால் ஒருபுதியகிளையை ஆரம்பித்தபின் ஸ்பெயின், தென் ஆபிரிக்கா முதலாம் இடங்களுக்கு இச்சபைமூலம் இறைபணிக்கு அனுப்பப்பட்டார். இப்போது இந்தியா, தாய்லாந்து, லாவோஸ், வியட்னும் முதலாம் இடங்களில் உள்ள சபையின் கிளை அங்கத்தினரைத் தரிசிக்கையில் இலங்கையில் உள்ள கிளையிலும் ஒரிருநாட்கள் தங்கியிருந்தார். அத்தருணத்தில் எமது நிருபர் அவரைப் பேட்டிகண்டார்.

—நிருபர்

இல்லறத்தூதுவர் ஏற்கும் பணிகள்

கணை: உங்கள் சபை எங்கு, எப்படி உண்டானது? அதன் நோக்கம் யாது?

கருத்து: புனித பன்னிரண்டாம பத்திநாத பாப்பானவரால் 1947-ம் ஆண்டு வெளியிடப்பட்ட (Provida Mater Ecclesia) அறிக்கையில் குறிப்பிட்ட புதிய கிறிஸ்துவ பூரணத்துவத்திற்குச் செவிமடுத்து 1952-ம் ஆண்டு அருட்திருத்தந்தை லூயி மரி பாரூன், O. M. I. அடிகளால், கனடாவில் இப்புதிய சபை அடியிடப்பட்டது.

உலகத்தில் இருந்தே பரவ மற்ற, நீங்கற்ற உலகாரியங்களால் தன்னைப் புனிதப்படுத்திச் சுவிசேஷ உண்மைகளில் வாழ்ந்து கடவுளுக்கு மகிமையை உண்டுபண்ணுவதே சிறப்பான நோக்கமாகும்.

கணை: எவ்விடத்தில், எத்தொண்டுகள் புரிகின்றீர்கள்?

கருத்து: ஏழை—பணக்காரன், கிறிஸ்தவர்—கிறிஸ்தவர் அல்லாதோர் என்ற எவ்வித வேறுபாடுமின்றி, எவ்விடத்திலும் எந்த வேலையும் செய்யத் தயார். விசேஷமாக ஏனைய சங்கியாச, கன்னியர் வேலைசெய்யமுடியாத இடங்களையும், ஏழைகளின் இடங்களையும் விரும்புகிறோம்.

கணை: தொண்டாற்றுவதில் உங்களுக்கு ஏதாவது இடையூறுகள் ஏற்பட்டிருக்கிறதா?

கருத்து: உலகத்தோடொத்த சாதாரண உடையிலிருப்பதால் எந்த இடத்திலும் வேலைசெய்து கிறிஸ்துவுக்குச் சாட்சியாய் இருப்பது சுலபமாயிருக்கிறது.

கணை: இப்பொழுது எத்தனை இடங்களில் எவ்வளவு பேர் பணியாற்றுகிறார்கள்?

கருத்து: பதினைறு வருடங்களில், 1,200 அங்கத்தினர்களைக்கொண்டு 24 தேசங்களில் பணியாற்றுகிறோம்.

கணை: இச்சபையில் சேருவதற்குரிய வயது—படிப்பு எப்படி?

கருத்து: இத்தாபனத்தில் சேருவதற்கு ஆக்குறைந்தது 18—20 வயதாயிருத்தலும், நல்லதீர்ப்பு, பொதுவான புத்திக்கூர்மை, திடசித்தமும், இனியசுபாவமும் அவசியம். தன்னைத்தானே முற்றும் கடவுளுக்குக் கையளிக்க ஆயத்தமாயும், தனது சற்குடலுக்கும், குழுவுக்கும சேவைசெய்வதற்கு ஏதாவது தொழில் புரிய ஏற்ற கல்வியும் உடையவராய் இருத்தல் வேண்டும்.

கணை: இச்சபையில் அங்கத்தவர்களாய்ச் சேருவோர் கனடா சென்றுதான் பயிற்சி பெற்றுவரவேண்டுமா? எத்தனைவருடங்களின்பின் அங்கத்தினரை உறுதிசெய்து கொள்ளுகிறீர்கள்?

கருத்து: கடுகிலையம்கனடாவில இருந்தபோதிலும் அங்கத்தினர் தங்கள் அடிப்படைப்பயிற்சிகளைச் சொந்த இடத்திலேயே பெறுகின்றனர். அவர்கள் தங்கள் மூன்று வாக்குத்தத்தங்களையும் (அமைச்சல், தரித்திரம், கற்பு) கொடுப்பதற்குமுன் மூன்று வருடங்கள் பயிற்சி உறுப்பினராக இருக்கவேண்டும். அதன்பின் ஒவ்வொரு வருடமும் தமது வார்த்தைப்பாடுகளைப் புதுப்பித்தல்மூலம் ஒவ்வொரு அங்கத்தவரும் வாழ்க்கைச சுழற்சியில் ஏற்படும் மாற்றங்களுக்குள் மாட்டிக்கொள்ளாது தமது ஒப்புக்கொடுத்தலுக்குப் புதுமெருகு ஊட்டிக் கொள்ளுகிறார்கள்.

கணை: உங்கள்சபைமூலம் கிறிஸ்துவ பூரணத்துவத்தை அடையலாமா?

கருத்து: புளிக்காரத்தைப்போல, உலகினுள் இருந்தே அதை மாற்றக்கூடிய வல்லமைக்குத் தன்னை மாற்றி உலககாரியங்களாலேயே கிறிஸ்துவ பூரணத்துவத்தை அடையலாம. இதைப் புனித 12-ம் பத்திநாத பாப்பரசரே சத்தியப்பூர்வமாக அனுமதிக்கிறார்.

கணை: இலங்கையில் இச்சபையைப்பற்றிய தங்கள் கருத்து என்ன?

கருத்து: இல்லறத்தூதுவர் ஏற்கும பணிகள் இலங்கையிலும பலுகித் திருச்சபைக்கு உன்னததொண்டாற்றும்என திட்டமாக நம்புகிறேன்.

சிலாபம்:

மரியாயின் சேனை ஞானஒடுக்கம்

கிறிஸ்தவ மதத்தின் கீர்த்திக்கு அரும்பணிஆற்றிய பன்னிரு அப்போஸ்தலக் குருக்களின் சேவைகளில் இல்லறத்தாருக்கு உரியஒரு பகுதியினை செல்வனே செயலாற்றிட உருவாக்கப்பட்ட இயக்கமே மரியாயின் சேனையாகும்.

தமிழ் மொழியில் இயங்கும் சிலாபம் இமாகுலாதா கியுரியாவைச் சேர்ந்த இருபத்தைந்து பிரசீடியங்களின் ஞான ஒடுக்க விழா 13-2-69 தொடக்கம் 16-2-69 வரை தலவில்லு புனித அன்னம்மாளின் திருத்தலத்தில் சிறப்பாக நடைபெற்றது. 13-2-69-ம் நாள் சுமார் இருநூறுக்கு மேற்பட்ட மரியாயின் சேனை ஊழிய உதவி அங்கத்தினர்கள் சேனைத்தலைவர்களுடன் ஊர்வலம் வந்து மாலை 6-30 மணியளவில் புனித அன்னம்மாள் ஆலயத்தை வந்தடைந்தனர். அன்றைய நிகழ்ச்சிக்கு சிலாபம் இமாகுலாதா கியுரியாவின் ஆன்ம இயக்குநர் வண. பிதா பெனடிக் அன்ரனி பர்னாந்து அவர்கள் தலைமை தாங்கினர். பிரதம உரையாளராக யாழ்ப்பாண கொமிதாசிய ஆன்ம இயக்குநர் வண. பிதா எஸ். ஜே. இம்மானுவேல் அவர்கள் கலந்து கொண்டார். அவர் தமதுரையில் கூறியதாவது: "கிறிஸ்தவன் என்ற போர்வையுடன் வாழாது உண்மைக் கிறிஸ்தவ கொள்கைகளை மனித மரியாயின் சேவைதனை உலகம் அறிய வருங்காலச் சந்ததியினர் உணர பாடுபடவேண்டும் எனவும், அதற்கு எடுத்துக் காட்டாக மரியாயின் சேனை உறுப்பினர்கள் வாழ்ந்து காட்டிடவேண்டும். யேசுநாதர் சுவிசேஷ வடிவில் நிகழ்கின்றார். சுவிசேஷத்தை கற்று நாம் அதன்படி ஒழுகுதலே அவருக்குச் செய்யும் தொண்டாக அமையும் என்றார்.

பின்னர் சல்லாப நிகழ்ச்சியின்போது வண. பிதா மேரி ஜோசப், வண. பிதா எஸ். ஜே. இம்மானுவேல் ஆகியோர் சபை உறுப்பினர்களுடன் கலந்துரையாடினர்கள். அவ்வமயம் மரியாயின் சேனையின் கடமைகள் தெளிவாக கேள்வி விளக்கத்துடன் தெளிவுபடுத்தப்பட்டது.

15-2-69-ம் நாள் நிகழ்ச்சிக்கு தலைமைப் பொறுப்பை ஏற்றவர் சிலாபம் தூய அயர் அதிபர். பிறந்த மாக்கஸ் பர்னாந்து அவர்களாவார். அன்றையும் விழாவுக்கு சமூகம் தந்த அனைவரையும் புகழ்ந்துரைத்த சிலாபம் இமாகுலாதா கியுரியாவின் தலைவர் சகோதரர் வெண் செஸ்லாவுஸ் பெரோ அவர்கள் சிலாப தூய அயரின் சேவையையும் புகழ்ந்தார்.

விழா நடைபெற்ற காலங்களில காலைப்பூசையும், மாலை ஆராதனையும் திருமணித்தியாலங்களும், இரவு பொழுது போக்குக்கு கதம்ப நிகழ்ச்சிகளும், படக்காட்சிகளும் இடம் பெற்றன.

16-2-69 காலை 8மணிக்கு பாடற்பூசை, காலை 10மணிக்கு கியுரியாக் கூட்டம் ஆகியவை நடக்தேறின. ஈற்றில், சகோதரர் ய. பீட்டர் கொலஸ்கோ அவர்களது நன்றி உரையுடன் மரியாயின் சேனையின் நான்கு நாள் ஞான ஒடுக்க விழா இனிது நிறைவெய்தியது.

—சிலாபம் இமாகுலாதா கியூரியத் தலைவர்

பாத்திமாவில் போலிஷ் கொடி

பாத்திமா திருசேத்திரமகா தேவாலயத்தில் இருந்தவரும் பலவேறு உலக நாடுகளின தேசியக் கொடிகளுடன் போலிஷ்கொடிஒன்றும்முதன் முதலாகச் சேர்க்கப்பட்டுள்ளது. மான்செஸ்ரர்நகரில்வசிப்பவரும், ஒஸ்விற்ஸ் கூட்டடை முகாமிலிருந்து உயிர்தப்பிய வருமான திரு. ஜோதொட் லிஸ்கி என்ற போலிஷ் பிரமுகர் அத்திருசேத்திரத்தில் போலிஷ் கொடி ஒன்று இல்லாதகுறையை நிவர்த்திசெய்யுமுகமாகச் செஸ்ரேச் சேவா என்ற பிரபல போலிஷ்திருப்பதி மாதாவின்சாயலைத் தாங்கிய பெரிய கொடி ஒன்றைச் செய்வித்து, அதனை எடுத்துக் கொண்டு சென்ற கிறிஸ்மஸ் விழாவிற்குமுன் றோமைநகர் சென்று அங்கு பாப்பரசர் தமக்கு அளித்த பேட்டியிலே அவர் கரங்களால் அதனை ஆசீர்வதிப்பித்து நேரே பாத்திமாபதி சென்று அதன் மகாதேவாலயத்தில் அதனை ஸ்தாபித்தார்.

பழைய உடன்படிக்கையிலே கடவுளின் பிதாத்தன்மை

(வண. பிதா வே. அன்ரனி ஜோன்)

பிதாப்பிதாக்கள்:

இஸ்ரூயேல் மக்களின் ஆரம்ப சரித்திரம் பிதாப்பிதாக்களை மையமாகக் கொண்டதாயிருந்தது. இத்தப்பிதாப்பிதாக்கள் கடவுளில் அதிகம் உறுதியான விசுவாசம் வைத்திருந்தபடியால் மக்களுக்கு ஒரு கலங்கரை விளக்காய்த் திகழ்ந்தார்கள். ஆபிரகாம் விசுவாசத்தின் தூணாய் விளங்கினார். இதையிட்டுத்தான் நாம் இஸ்ரூயேலின் கடவுளைப் பிதாப்பிதாக்களின் கடவுளென்றும், ஆபிரகாம், ஈசாக், யாக்கோப்பின் கடவுளென்றும் அழைக்கின்றோம். கடவுள் ஒரு தந்தையாயிருக்கிறார்; கடவுள் எம்பிதா என்னும் பேருண்மையை மக்கள் பிதாப்பிதாக்களின் மூலம் அறிந்தார்கள். தங்களுடைய இக்கட்டுகளிலும் இடைஞ்சல்களிலும் தந்தையின் அன்பையும் பராமரிப்பையும் மக்கள் உணர்ந்தனர்.

யாத்திராகமம்:

யாத்திராகமத்திலே இஸ்ரூயேல்மக்கள் கடவுளின் அன்பின் பராமரிப்பை அனுபவித்தனர். அந்த அன்புள்ள தந்தை பிள்ளைகளாகிய எம்மிடம் பணிவையும் நம்பிக்கையையும் எதிர்பார்க்கிறார் என்னும் உண்மையை உணர்ந்தனர்.

தீர்க்கதரிசிகள் கடவுளின் பிதாத்தன்மையைப் பற்றி விளக்கம்:

ஓசியாஸ் என்னும் தீர்க்கதரிசி கடவுள் மிகவும் இரக்கமுள்ள தந்தை என்று கூறுகிறார். ஓசியாஸ் (11: 1—3). "நான் இஸ்ரவேல் இளைஞனாய் இருந்தபோது அவனை நேசித்தேன். எகிப்திலிருந்து எனது குமாரனை வரவழைத்தேன்." "நான் எப்பிராமைக் கைபிடித்து நடக்கப்பழகினேன்; ஆனாலும் நான் தங்களைக் குணமாக்குகிறவரென்று அறியாமற் போனார்கள்." ஜெரமியாஸ் இறைவாக்கினர் 3ஆம் அதிகாரம் வசனங்கள் 4—19 வரையும் கடவுளின் பிதாத்தன்மையை வர்ணிக்கிறார். "சீர்கெட்ட பிள்ளைகளே, திரும்புங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் உங்கள் நாயகர்;..."

"நான் உன்னைப் பிள்ளைகளின் வரிசையிலே வைத்து சனக்கூட்டங்களுக்குள்ளே நல்ல சுதந்தரமாகிய தேசத்தை உனக்குக் கொடுப்பது எப்படியென்று சொன்னேன்; ஆனாலும் நீ என்னை நோக்கி, என்பிதாவே என்று அழைப்பாய்; நீ என்னை விட்டு விலகுவதில்லை என்று திரும்பவும் சொன்னேன்."

இசையாஸ் இறைவாக்குரைப்பவர்—தெரிதல் அல்லது தெரிந்தெடுத்தல் பிதாத்தன்மையின் அடித்தளம் எனக்கூறுகிறார். "இப்பொழுதும் கர்த்தாவே, நீர் எங்களுடைய பிதா, நாங்கள் களிமண்; நீர் எங்களை உருவாக்குகிறவர், நாங்கள் அனைவரும் உமதுகரத்தின் கிரியை."

முடியாட்சியில்:

கடவுள் அரசர்களின் தந்தை 2 சாமுவேல் 7: 14. "நான் அவனுக்குப் பிதாவாயிருப்பேன், அவன் எனக்கு குமாரனாயிருப்பான்" சங்கீதம் 2: 7 நீர் என்னுடைய குமாரன் இன்றான் உம்மை ஜனிப்பித்தேன்."

விற்பனைக்கு:

சிறுவர் வழிகாட்டி

(முதல்நன்மைக் குறிப்பிடம்)

பிரதி: விலைசதம் 50

தபாற்செலவு வேறு.

தேவையானோர் மேல்வரும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்:

அதிபர்:
புனித சூசைமாமுனிவர்
அச்சகம்,
யாழ்ப்பாணம்.

இந்திய கத்தோலிக்க பத்திரிகையாசிரியர் கருத்தரங்கு

இந்தியாவிலுள்ள கத்தோலிக்க நாளிதழ்கள், வாரவெளியீடுகள் ஆகியவற்றின் ஆசிரியர்களின் கருத்தரங்கு 1969 பெப்ரவரி 5, 6 தேதிகளில் மயிலாப்பூர் நியான ஆசிரமத்தில் நடைபெற்றது. பம்பாய், கல்கத்தா, கோவா, எர்ணாகுளம, மங்களூர், மதுரை, சென்னை, புதுச்சேரி, புதுடில்லி ஆகிய நகரங்களிலிருந்து பத்திரிகை ஆசிரியர்களும் போளர்களும் கருத்தரங்கில் கலந்துகொண்டார்கள்.

கத்தோலிக்க பத்திரிகைகளின்வளர்ச்சி, ஆசிரியர்களின் தொழில் நுணுக்கப்பயிற்சி, பத்திரிகைகளின் பொருளாதாரம், தேசிய உணர்வையும் கலாசாரத்தையும் பேணுதல், அரசியல்—சமூக பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு இடமளித்தல், குருக்கள், துறவியர், பொதுநிலையினரின் வாழ்வுப் பிரச்சினைகளை ஆய்தல், பிற சமூகத்தினரிடையே நம் பத்திரிகைகளின் செல்வாக்கை வளர்த்தல் போன்ற பல்வேறு பொருள்கள் பற்றி விவாதம் நடைபெற்றது.

1969 மேமாதத்தில் பெங்களூரில் நடைபெறவிருக்கும் தேசிய கருத்தரங்கிற்குப் பரிந்துரைகளை வழங்கும்வகையில் இக்கருத்தரங்கு அமைந்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதிப் பணிகளுக்கான உணவு உதவி ஒப்பந்தம்

அமெரிக்காவும்இலங்கையும்கைச்சாத்திட்டன

கொழும்பு பெப்ரவரி 19.

அமெரிக்காவுக்கும் இலங்கைக்குமிடையில் மற்றுமொரு பெரிய பொருளாதார ஒப்பந்தம் ஒன்று இன்று கைச்சாத்திடப்பட்டது. கடந்த 18 மாதங்களுள் அமெரிக்காவுக்கும், இலங்கைக்குமிடையில் ஏற்படுத்தப்பட்ட மூன்றாவது உதவி ஒப்பந்தமாகும் இது. அமைதிப் பணிகளுக்காக அமெரிக்கா இலங்கைக்குக் கொடுக்கும் உணவுஉதவி இதுவாகும். இதன்படி அமெரிக்கா சற்றேறக்குறைய 150,000 தொன் கோதுமை மாவை இலங்கை நாட்டுக்குக் கொடுக்கும். இவற்றின் பெறுமதி 17,500,000 டாலராகும். இலங்கை நாணயத்தில் ரூபா 104,125,000.

இந்த ஒப்பந்தத்தில் இன்று இலங்கைத்திட்ட அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி டாக்டர் காமினி கொரியா அவர்களும், அமெரிக்கத் தூதர் அன்ட்ரூ வீ. கொரி அவர்களும் கையொப்பமிட்டனர்.

இந்த ஒப்பந்தத்தின்படி உடனடியாகத் திட்டம் அமுல் நடத்தப்படும். கப்பல் ஒழுங்குகள் செய்யப்பட்டதும் கோதுமை மா இலங்கைக்கு உடனடியாக ஏற்றுமதி செய்யப்படும்.

அமைதிப் பணிகளுக்காக உணவு வழங்கும் அமெரிக்கத் திட்டத்தின் அடிப்படையில் உதவிபெறும் நாடுகள் தங்கள் உணவு உற்பத்தித்துறையில் ஊக்கம் செலுத்த வேண்டும் என்பதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இதன்படி அமெரிக்க பண்ணை உற்பத்திப் பொருட்களைத் தேவைப்படும் நாடுகளுக்கு அமெரிக்கா வழங்கி வருகிறது.

இத்தகைய ஒப்பந்தங்கள் கடந்த 1967-ம் ஆண்டு அக்டோபர் மாதம் தொடக்கம் இன்றுவரை மூன்று முறை கைச்சாத்திடப்பட்டன. அப்போது 87,000தொன் கோதுமை மாவும், 6,000 தொன் சோளமும் அமெரிக்கா இலங்கைக்கு வழங்குவதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இதன்பெறுமதி 9,970,000 டாலராகும்

கடந்தவருடம் ஜூன்மாதத்தில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தின்படி 15,000,000 டாலர் பெறுமதியான 15,000 தொன் கோதுமை மாவினை அமெரிக்கா இலங்கைக்குக் கொடுத்தது. இதன்படி கடைசியாக இலங்கை வந்திருக்கும் மா தற்பொழுது இறக்கப்படுகிறது. ஜலபாலக என்ற கப்பல் யாழ்ப்பாணத்தில் மா இறக்குமதி செய்கிறது. ஒதன், சில்வர் ஹோக், ஹோலன்ட்ஸ்டுயின் ஆகிய மூன்று கப்பல்களும் கொழும்புத் துறைமுகத்தில் மாவினை இறக்குமதி செய்கின்றன.

(USIS)

புடவையும் கூப்பனும்

நாட்டில் நடைபெறும் புடவைவியாபாரத்திலுள்ள ஊழல்களை ஒழிக்குமுகமாகச் சலுசலஸ்தாபனம் புதிதாகக் கையாளத் தொடங்கியிருக்கும் முறைகளில் ஒன்று, எந்தச் சலுசலவியாபாரியும் வெட்டப்பட்டகூப்பன்களை ஏற்கப்படாது. புடவைவாங்குகிறவர்கள் தங்களது அரிசிக் கூப்பன் புத்தகங்களையும் காண்பிக்கவேண்டும். மற்றொன்று, ஒவ்வொரு பற்றுச் சீட்டிலும் அரிசிக்கூப்பன் புத்தகத்தின் இலக்கத்தைப் புடவை வியாபாரிகள் குறித்தாகவேண்டும். பொதுவிலே கூப்பனின்றிச் சலுசல எவ்வித புடவையும் விற்பதில்லை.

சியவச சுவீப்

கல்வி நூற்றாண்டுவிழாசம்பந்தமாகக் கல்விப்பகுதி நடத்திய 'சியவச'சுவீப்பில் எதிர்பார்த்ததைவிட அதிகபணம் சேர்ந்துள்ளது. இதனால் 10லட்சம் ரூபாமட்டுமே இலாபம் கிடைக்குமென முதலில் எதிர்பார்க்கப்பட்டபோதிலும் 12 லட்சத்து 23ஆயிரத்து 400 ரூபா இலாபம் கிடைத்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

நெல்விளைவு குன்றியது

வரட்சி காரணமாக யாழ்ப்பாண மாவட்டத்திலே சென்ற பெரும்போகத்தில் நெல்விளைவு 50சதவிகிதம் குன்றியதாக —அதாவது 1,160தொன்நெல் நாசமடைந்திருப்பதாக யாழ்ப்பாண அரசாங்க செயலகத்தின் புள்ளிவிபரங்கள் எடுத்துக் காட்டுவதாகத் தெரியவருகிறது.

மோட்டார் படகுச்சேவை

நெடுந்தீவு–குறிகாட்டுவான் மோட்டார்படகுப்பிரயாணச் சேவையில் சென்ற 16ஆம்திகதியிலிருந்து புதியமாற்றம் ஒன்று ஏற்பட்டிருக்கிறது. இதுவரை தினமும் இரண்டு முறை நடைபெற்ற படகுச் சேவை அன்றுமுதல் மூன்று முறை நடைபெற்றுவருகிறது. நெடுந்தீவிலிருந்து காலை 8 மணிக்கும், பகல்12மணிக்கும், பிற்பகல் 2மணிக்கும, குறிகாட்டுவானிலிருந்து காலை 9-30மணிக்கும், காலை11-30 மணிக்கும், பிற்பகல் 3-30 மணிக்கும் மோட்டார்படகுகள் புறப்படுகின்றன.

சிரமதானத்தின்பலன்

வெண்ணப்புவாத் தொகுதியிலே சமீபத்தில் ஒழுங்குசெய்யப்பட்ட சிரமதான வேலைகள் மூலம் 12நீர்ப்பாசன திட்டங்களும், பயனின்றிக் காடாய்க்கிடந்த பலகுளங்களும் செப்பனிடப்பட்டுச் சுமார் 5,000 ஏக்கர் காணிக்கு நீர்ப்பாசன வசதி கிடைத்திருக்கிறது. அரசாங்கம் இத்தவேலைகளைச்செய்வதாயிருந்தால் குறைந்தபட்சம் 25,000ரூபா செலவேற்பட்டிருக்குமென மதிப்பிடப் பட்டுள்ளது.

கூடுதலான நெல்விளைவு

இலங்கையிலே சென்ற 1968ஆம் ஆண்டில் மொத்தமாக விளைந்தநெல் 6கோடியே 45 லட்சத்து 40ஆயிரம் புசல். இது விவசாயப்பகுதி திட்டமிட்டிருந்த நெல்விளைவின் இலக்கிலும்பார்க்க 32லட்சம் புசல் கூடுதலானது.

களவுபோன புத்தசிலைகள்

மாவனெல்லைப்பகுதியிலே தேவனகாலையிலுள்ள பிரசித்தி பெற்ற பூரண இராஜமகா விகாரையுள் திருடர்புகுந்து அங்கே இருந்துவந்த பெறுமதிவாய்ந்த 32 புத்தசிலைகளையும், காணிக்கைப்பெட்டியை உடைத்து அதிலிருந்த பெருந்தொகைப் பணத்தையும், பூசைஅறையிலிருந்த பல வெள்ளிப்பாத்திரங்களையும் அபகரித்துக் கொண்டு போய்விட்டார்கள். இத்தனிகாரை நிலமட்டத்திலிருந்து அரைமைல் தூரத்திலுள்ள ஒருகுன்றில் அமைந்துள்ளதாகும்.

ஒரேநாளில் நான்குவழக்குகள்

தற்போது நடைபெற்றுவரும் யாழ்ப்பாணச் சுப்பிறீங் கோட்டில் ஒரேநாளில் நான்கு வழக்குகள் விசாரணைசெய்து முடிக்கப்பட்டன. முதல் மூன்று வழக்குகளிலும் ஐதிரிகள் தண்டனைவிதிக்கப் பட்டார்கள். நான்காவதான சங்கானைக் கொலைமுயற்சிவழக்கில் யூரிமார் நாலுக்குமூன்று முகத் தீர்ப்பளித்தமையால் அவர்கள்சபை கலைக்கப்பட்டு மறுவிசாரணை மார்சி26ஆம்திகதிக்குப் பின்போடப்பட்டது.

வரலாற்று நூல்

மன்னர் - மாதோட்ட வரலாற்று ஆராய்ச்சிநூல்ஒன்றை வெளியிடுவதற்கான நடவடிக்கை மன்னரில் எடுக்கப்பட்டு வருகிறது. இதற்கென முன்னாள் கிராமக்கோட்டுநீதிபதி திரு. ஏ.ஆர்.ஜேம்ஸ் அவர்கள்தலைமையில் நடைபெற்ற ஒருகூட்டத்திலே மன்னர்-மாதோட்டச் சரித்திரக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. இதன்தலைவராகத் திரு. ஏ. ஆர்.ஜேம்ஸ்அவர்களும், செயலாளராகத் திரு.தானியல் றோச்அவர்களும், தெரியப் பெற்றுள்ளனர். இந்தநூலை வெளியிடுவதற்கான சகலசெலவுகளையும் தலைவர்அவர்களே கொடுத்துதவ முன்வந்துள்ளாரென அறிகின்றோம்.

தோற்றவர் பதவிபெற்றார்

பண்டாரகமைத்தொகுதி உபதேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அபேட்சகரான திரு. கே. டி. டி. பெரேரா வெற்றிபெற்றார். ஆனால், இவரின் தேர்தல் முறையற்றதென ஆட்சேபித்துச் செய்யப்பட்டமனு விசாரணைமுடிவாக அவர் தமதுஸ்தானத்தை இழந்தார். இத்தத்தீர்ப்பை ஆட்சேபித்து இவர் மூன்று அரசர்களின் நீதிமன்றத்துக்கு அப்பீல்செய்தார். நீதியரசர்கள்மூவரும் இவரின் அப்பீலைத் தள்ளுபடிசெய்து, தேர்தலிலே இவர் தோற்கடித்த திரு. ஜோர்ஜ் தொத்தலாவலையை அத்தொகுதிப் பிரதிநிதியாகப் பிரகடனஞ் செய்துள்ளனர்.

மாணவரும் வீதிஒழுங்கும்

பாடசாலை மாணவர்கள் யாழ்ப்பாணநகரிலே பாதசாரிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள கடவைகளைக் கவனித்து நடவாது தாங்கள் நினைத்தபடியே ஒழுங்கற்றமுறையில் கடந்துசெல்வதால் அவர்களுக்கு வீதிகளில் செல்லும் முறைபற்றிக் கற்பிக்குமாறு பாடசாலைகளின் அதிபர்களுக்கு யாழ்ப்பாணம் பொலிஸ் சுப்பிறின்டென்டென்ட் கேட்டிருக்கிறார்

பயறும் பருப்பும்

பர்மாவிலிருந்து 3,000 தொன் பயறும், கிழக்கு ஆபிரிக்காவிலிருந்து1,000தொன துவரம்பருப்பும், இந்தியாவிலிருந்து 1,500தொன் உழுந்தும் மூன்றுகப்பல்களிலே சமீபத்தில்கொழும்புத்துறைமுகம் வந்துசேரவிருக்கின்றன. அதனால இவைசம்பந்தமான தட்டுப்பாடு இருக்கமாட்டாதென அறிவிக்கப் பட்டுள்ளது.

மகாதேவா பாலம்

பிரான்சிய நிபுணர்களின் அறிக்கை கிடைத்தபின்னரே மகாதேவா பாலவேலையை ஆரம்பிக்க முடியுமென்று பிரதமர் தெரிவித்திருக்கின்றார். இந்தப்பாலத்தை அமைப்பதானது சாவகச்சேரி உப்பளங்களுக்குக் கெடுதியாக அமையுமா என்பதுபற்றித் தற்போது பிரான்சிய நிபுணர்கள் ஆராய்ந்து வருகிறார்கள்.

● இன்று உலக மக்கள் 6,000 பாஷைகள் வரை பேசுவதாகக் கண்டறியப்பட்டிருக்கிறது. இந்தியாவில் ஏறக்குறைய 179 பாஷைகளும், சோவியற் ரஷியாவில் ஏறத்தாழ 100பாஷைகளும் பேசப்படுகின்றன. இவைகள் உட்பட உலகின் நான்கு பகுதிகளிலும் 6,000 பாஷைகள் வரை பேசப்படுவதாய் ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்து தெரிவித்திருக்கிறார்கள். இவற்றிலே ஒன்றுக்கொன்று தொடர்புடைய பாஷைகளும் அநேகமுண்டு.

● தருக்கியிலும் இடதுசாரிக்கோஷ்டிக்கும், வலதுசாரிக்கோஷ்டிக்குமிடையே மோதல்களும், கைகலப்புகளும் தலையெடுக்கத் தொடங்கியுள்ளன. ஆறுவது அமெரிக்கக்கடற்படை தருக்கிய பிரதேசத்திற்கு வருவதையிட்டுச் சென்ற 17 ஆம்திகதி இருகோஷ்டிகளும் கைகலப்பிலே இறங்கியதால் இருதரப்பினரிலும் பெருந்தொகையினர் காயமடைந்தனர். மூவர் கொல்லப்பட்டார்கள்.

● இங்கிலாந்திலும், வேல்சிலும்தற்பொழுது 41,43,850 கத்தோலிக்கர்வரை இருந்துவருகின்றனர். இத்தொகை முன்னியவருடத்திலும் சுமார் 55,000பேரால் அதிகமானது. கடந்த ஒருவருடத்திலும் இவ்விருநாடுகளிலும் புறொட்டஸ்தாந்தருமே, பிறருமாக 5,293 பேர்மனந்திரும்பிக் கத்தோலிக்கமதையில் சேர்ந்திருக்கிறார்கள்.

● உலகிலேயே முதல்முறையாக மனிதகுரல்வளை மாற்றுச் சத்திரசிகிச்சை ஒன்று பெல்ஜியதேச பிறசெல்ஸ்நகரிலே சென்ற6 ஆம்திகதிநடைபெற்று வெற்றியளித்திருப்பதாகச் செய்தி கிடைத்திருக்கிறது, இதிலே 62வயதுடையஜோன்பப்ரிஸ்ற் என்ற பொலிஸ்காரன் புதுக்குரல்வளை பொருத்தப்பட்டு மீண்டும்பேச ஆரம்பித்துவிட்டாராம். அவருக்கு மூச்சும், குரலும் சீராக வருகின்றனவாம்.

கிறிஸ்தவர்களாக மனந்திரும்பிய முஸ்லிம்கள்

இந்தோனேசியாவிலே கடந்த மூன்று வருடங்களிலும் 2,50,000 முஸ்லிம்கள் மனந்திரும்பிக் கிறிஸ்தவர்களாகியிருப்பதாக அதன் தலைநகராகிய ஜகார்த்தாவிலே பிரசுரமாகும் "புதியதலைமுறை" என்ற ஒருமுஸ்லிம் தினசரிபத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது. இத்தகைய பெருந்தொகையான முஸ்லிம்கள் மனந்திரும்புவதற்கு அங்குள்ள முஸ்லிம் தலைவர்கள் ஓரளவிலே குற்றம் சாட்டப் படவேண்டியவர்கள். ஏனெனில் அவர்கள் தங்களது சமயத்தைப் பரப்பும் மிஷனரிய தொண்டைக் காட்டிலும் அரசியலுக்கே அதிகம் முக்கியத்துவம் அளித்தார்களென அது எடுத்துக்கூறியுள்ளது. முன்னர்கம்யூனிஸ்த அரணையிருந்த யாவாவின் மத்திய, கிழக்குப் பகுதிகளிலேயே அதிகமான மனந்திரும்புதல்கள் நடைபெற்றுள்ளன.

ஜேர்மனிய கத்தோலிக்கர்களும் குஷ்டரோகர்களும்

ஜேர்மனிய கத்தோலிக்கமக்கள் கடந்தவருடத்திலே குஷ்டரோகர்களுக்கு உதவியாக 80லட்சம் மார்க் நன்கொடையாக வழங்கியிருக்கிறார்கள். இப்பணம் ஆபிரிக்க, ஆசிய, லத்தீன் அமெரிக்க நாடுகளிலுள்ள 185குஷ்டரோகச் சாலைகளை ஆதரிப்பதற்கெனப் பயன்படுத்தப்பட்டது. அவற்றிலே 85டக்ற்மார் சமூக ஊழியர்களினதும,தொண்டர்களான சிலநிபுணர்களினதும் உதவியோடு சேவையாற்றிவருகின்றனர். குஷ்டரோகர்களுக்கு உதவிசெய்வதற்கென இருக்துவரும் ஜேர்மன்ஸ்தாபனம் அதற்கென இதுவரை 4கோடியே 40லட்சமார்க்கும், பெருந்தொகையான உடைகள், மருந்துகளையும் சேகரித்து அனுப்பிவைத்துள்ளது.

சாராயவடிசாலை

வடபகுதியிலே பனங்கள்ளிலிருந்து சாராயம வடிப்பதற்கெனப் பணையிலே பெருந்தேசப்பரப்பில் சாராய வடிசாலைஒன்று அமைப்பதற்குச் செய்திருந்த திட்டத்தை அரசாங்கம் கைவிட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

● பிரித்தானியர்கள் ஒருவருடத்திலே புகைக்கும் சிகரெற்றுகளுக்கென 131 கோடியே 30லட்சம்பவுணும், அருந்தும் பீருக்கென 89கோடியே 70லட்சம்பவுணும், உலைஞுக்கென 63கோடிபவுணும் செலவிடுகின்றார்கள். பிரித்தானியர்களின சனத்தொகைப்படி கணிக்குமிடத்து அவற்றிற்கென வருடம் ஒன்றுக்கு ஆளுக்குச் சராசரியாக 53 பவுண்செலவாகிறது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20இலக்க 5ஆம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச்.சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1969ஆம் ஆண்டு பங்குனி மாதம் 1ஆம்தேதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org